Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 28 ஹிஜ்ரி 1428 துல்கஃ 11 (12.01.2006) வியாழக்கிழமை இதழ் 104

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# கடற்படைக்கு நவீன பீரங்கிகள்: சீனா விரைகிறது உயர்மட்டக்குழு!

கொழும்பு —

சீனாவிடமிருந்து கடற்படைக்கு 30 மில்லிமீற்றர் ரக பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படைப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து - கடற்படையை நவீனமயப்படுத்தும் வகையில் அரசதரப்பு அவசர நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதன்படி கடற்படையினர் தற்போதுள்ள அதிவேகத் தாக்குதல் படகுகளில் - 20 மில்லிமீற்றர் பீரங்கிகளுக்குப் பதிலாக சீனத் தயாரிப்பான 30 மில்லி மீற்றர் பீரங்கிகளைப் பொருத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே இஸ்ரேலிடம் 30 மில்லி மீற்றர் பீரங்கிகளைக் கொள்வனவு செய்ய முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாள் வெட்டில் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம் —

வடமராட்சி கிழக்கு - அம்பன் பகுதியில் இனந்தெரியாதோரின் வாள் வீச்சில் படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எம்.விஜிதகுமார என்ற படைச் சிப்பாயே வள்வெட்டுக்கு இலக்காகி படுகாய மடைந்தவராவார்.

வீதிக்கண்காணிப்பில் ஈடுபட்டபோதே இவர் மீது இனந்தெரியாதநபர் வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொன்ஸ்டபிள் படுகாயம்!

திருகோணமலை —

திருகோணமலை - 3 ஆம் கட்டை பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச்சாவடி மீது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.35 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் காயமுற்ற கொன்ஸ்டபிள் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## படையினரின் சூட்டில் பொதுமகன் மரணம்!

யாழ்ப்பாணம் —

கொக்குவில் பகுதியில் நேற்று மாலை படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நெடுந்தீவை சொந்த முகவரியாகக் கொண்ட பசுபதி (வயது 41) என்பவரே உயிரிழந்தவரென யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் நின்ற படையினர் மீது கைக்குண்டுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமுர்த்தி உத்தியோகஸ்தர் மட்டுவிலில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

மட்டுவில்-பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பகுதியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான யுவதி ஒருவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்

## கொழும்பில் படையினரின் தேடுதல்கள் மேலும் தீவிரமாகத் தொடரவேண்டும்!



கொழும்பு நகரில் தமிழர்கள் மீதான கெடுபிடிகள் அதிகரிப்பின் சாட்சி. (படம்: ரொய்ட்டர்)

## ஹெலஉறுமய கோருகிறது

கொழும்பு —

நாட்டினதும், மக்களினதும் பாதுகாப்புக்காக கொழும்பிலும், ஏனைய பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படும் சோதனைகள், வேகமாக நடைபெறவேண்டுமெனவும், விடுதலைப் புலிகளுக்குச் சார்பான அரசியற் கட்சிகளின் அழுத்தங்களுக்கு நாட்டின் தேசிய பாதுகாப்பைக் காட்டிக்கொடுக்க அனுமதிக்கக்கூடாதெனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜனாதிபதியின் ஆலோசகரும், பாதுகாப்பமைச்சின் மேலதிக செயலாளர் என்ற வகையிலும் எச்.எம்.ஜி. கொட்டகதெனியவால் பொலிஸாருக்கு விடுக்கப்பட்ட ஆணைக்கும், மக்களின் பாதுகாப்புக் கருதி மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர்கள் சிலர் தமது எதிர்ப்பை ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளனர் என அறியக்கூடியதாகவுள்ளது.

அதேபோன்று, கொட்டகதெனிய தனது பதவியிலிருந்து ஜாதிக ஹெல உறுமயவின் அரசியலை நடத்துவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## மட்டுவிலில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் ——

மட்டுவில்-பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பகுதியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான யுவதி ஒருவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டுவில் வடக்கு - சாவகச்சேரியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பவளராணி (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

நேற்று நண்பகல் இவரது வீட்டுக்குச்சென்ற இனந்தெரியாத நபர்கள் தையல் வேலையில் ஈடுபட்டிருந்த இவர் மீது சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சம்பவத்தில் மேற்படி யுவதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சாவகச்சேரி (12 ஆம் பக்கம் பார்க்க)



தேரா விடுத்துள்ள விசேட அறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜனாதிபதியின் ஆலோசகரும், பாதுகாப்பமைச்சின் மேலதிக செயலாளர் என்ற வகையிலும் எச்.எம்.ஜி. கொட்டகதெனியவால் பொலிஸாருக்கு விடுக்கப்பட்ட ஆணைக்கும், மக்களின் பாதுகாப்புக் கருதி மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர்கள் சிலர் தமது எதிர்ப்பை ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளனர் என அறியக்கூடியதாகவுள்ளது.

அதேபோன்று, கொட்டகதெனிய தனது பதவியிலிருந்து ஜாதிக ஹெல உறுமயவின் அரசியலை நடத்துவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமான் மற்றும் பெ.சந்திரசேகரன், மனோகணேசன், மனித உரிமை அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், இடதுசாரிக் குழுக்கள் ஆகியன கொட்டகதெனியவின் செயற்பாட்டை விமர்சனம் செய்துள்ளதுடன், அவரது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அழுத்தம் கொடுத்துள்ளன.

கொழும்பு நகரில் இடம்பெறும் கொலைகள் குறித்து ஆராய்ந்து பார்க்கும்போது, விடுதலைப் புலிகளின் பயங்கர முகாம்கள் மற்றும் ஆயுதக் களஞ்சியங்கள் கொழும்பில் இருப்பது புலனாகிறது.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தையும், (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளை வானில் வந்தோரால் இளைஞர்கள் இருவர் கடத்தல்!

பருத்தித்துறை ——

டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் இரு ஊழியர்கள் நேற்றுக்காலை வெள்ளை வான் ஒன்றில் வந்தோரால் பருத்தித்துறை பகுதியில் வைத்துக்கடத்தப்பட்டனர். நேற்று அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

பருத்தித்துறை ஓடக்கரை வீதியைச் சேர்ந்த நாராயணமூர்த்தி காண்டீபன் (வயது 30), தம்பையா தர்மஸ்ரீ (வயது 28) ஆகிய இளைஞர்களே கடத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இதில் தர்மஸ்ரீ என்னும் இளைஞர் 7 மாதங்களுக்கு முன்பே திருமணம் முடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு இளைஞர்களும் காலை 5.45 மணியளவில் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக வந்த போது அவர்களின் வீட்டிலிருந்து சுமார் 75 மீற்றர் தொலைவில் இரு வெள்ளை வான்கள் நின்றதாகவும், இராணுவ சீருடையில் வந்தவர்களே பலவந்தமாக இவர்களை அழைத்துச் சென்றதாக இவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும், மனித உரிமை ஆணைக்குழு விடமும், டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்திடமும் முறையிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (12)

# சிறுப்பிட்டி - மடத்தடிப் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் சடலம்!

யாழ்ப்பாணம் ——

சிறுப்பிட்டி - மடத்தடி வீதியிலுள்ள பற்றைக் காட்டுக்குள் சூட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான புத்தூர் கிழக்கைச் சேர்ந்த தம்பு நடேசு (வயது50) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்றுமுன்தினம் இரவு மேற்படி குடும்பஸ்தரின் வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் - உறக்கத்திலிருந்த அவரை எழுப்பி தம்முடன் கூட்டிச்சென்றதாகவும் அதன்பின்னர் வீடு திரும்பாத நிலையில் நேற்றுக் காலை சிறுப்பிட்டிப் பகுதியிலுள்ள பற்றைக் காட்டுக்குள் இருந்து சடல மாக மீட்கப்பட்டார்.

இதேவேளை - கடந்த சில நாட்களுக்கு முன்னர் அவரது வீட்டுக்கு இராணுவத்தினர் தேடி வந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு நேற்றுக்காலை 11 மணியளவில் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன், மரண விசாரணை மேற்கொண்ட பின்னர் சடலத்தை வைத்திய பரிசோதனைக்காக (12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்!

## அவுஸ்ரேலியா வேண்டுகோள்

மெல்போர்ன் ——

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தற்போதைய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென அவுஸ்ரேலியா கேட்டுள்ளது.

இது தொடர்பாக அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டௌனர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

போர்நிறுத்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்தும் வகையில், இரண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்கு தமிழகம் உதவத் தயாராகிவிட்டது!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

தமிழ் மக்கள் நீண்ட காலமாக அனுபவித்துவரும் துன்பத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கு தமிழக மக்கள் இனரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் ஒருமித்து நிற்கின்றனர் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழ வேந்தன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் குறித்து தமிழக மக்களிடையே ஏற்பட்டிருக்கும் உணர்வலைகள் குறித்தும், ஈழத்தமிழர் போராட்டத்துக்கு தமிழக மக்கள் ஆதரவு தெரிவித்து வருவதற்கு நன்றி தெரிவித்தும் அவர் அனுப்பிவைத்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது -

தமிழீழம் மலர தமிழகம் திரண்டு வருகிறது. டெல்கியிலும் மனமாற்றம் ஏற்படுகிறது. கடல் கடந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் கண்ணீர் துடைக்கின்ற காவல் தெய்வம் - கலைஞரும் எமக்காக ஓங்கிக் குரலெழுப்புகின்றார். கலைஞரின் வீரவாள், வையமேற்றும் வைகோவின் குரலுக்கும், டெல்கி செவிசாய்க்கத் தொடங்கியுள்ளது. வைகோ, மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுடன் உரையாடியபோது - தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் அமைதிப் பேச்சுவார்த்தைக்காக அரசுக்குப் புலிகள் பல சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிட்டார்கள்.

இதற்கு மேலும் பேச்சுவார்த்தைக்கான காலத்தை இழுத்தடிப்பது அரசின் சதி வலைக்குள் புலிகளை சிக்க வைப்பதாகும். தமிழன் கோழையுமல்ல, ஏமாளியுமல்ல என்பதைப் புலிகள் உலகத்துக்கு நிரூபித்து வருகிறார்கள்.

இந்நிலையில் தமிழன் புதுவாழ்வு பெறவேண்டும் என்பதில் இன ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் தமிழக மக்கள் ஒருமித்த கருத்தில் உள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்று புலிகளின் போர்க்கோல உணர்வையும், அரசின் ஏமாற்றுப் போக்கையும் வைகோ அப்படியே படம்பிடித்துக் காட்டியிருப்பது அவரின் அரசியல் ஆழத்திற்கு அரிய எடுத்துக்காட்டாகும்.

ஈழத்தமிழருக்கு இனிமேல் இன்னல் நேரிட முடியாது என்று சொல்லுமளவுக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் பிரிக்கமுடியாத அங்கமாக விளங்கும் தமிழகத்தின் 6 கோடி மக்களின் குரலுக்கு புதுடெல்கி செவி சாய்க்கத் தொடங்கியுள்ளது. இதன் அறிகுறியாக இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் செயலற்றுச் செத்துப் போய்விட்டது. எனவே பாரதத் தாயின் பாச உணர்வில் - அரவணைப்பில் தமிழீழம் மலர்வதை உலகின் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

ஈழத்தமிழர் விடயத்தில் தமிழகம் தொடர்ந்தும் பார்வையாளராக இராது என்ற கலைஞரின் அறிவிப்பு உலகத் தமிழருக்கு உவகைப் பெருக்கினைத் தருகிறது.

ஈழத்தமிழ் மக்கள் விடயத்திலும் மலையகத் தமிழ் மக்கள் விடயத்திலும் தமிழகம் தொடர்ந்தும் பார்வையாளராக இருக்கமாட்டாது. மாறாக ஆயிரக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது குறித்து இந்திய அரசின் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக கலைஞர்கூறியுள்ள கருத்து காப்பார் யார் உளரோ எனக் கலங்கி நிற்கும் எமக்குக் கண்ணீர் துடைக்கும் நிகழ்ச்சியாக கலைஞரின் இந்தச் செயல் அமைகிறது.

இந்தச் செய்தியை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்கு கலைஞர் கூறியிருக்கும் கருத்து வரவேற்கத்தக்க கருத்தாகும். பல நெருக்கடிகளுக்கு இடையில் மலையக மக்களை எம்முடன் இணைந்து, பிணைத்து தமிழகத்துக்கு ஒரு பாலமாக விளங்க, பாங்குடன் சந்திரசேகரன் ஆற்றும் பணி சால்புடையது. அண்மையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானும் ஈழத்தமிழ் மக்களுடன் இணைந்தது வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்துள்ளது.

எம்முடன் இணைந்திருப்பது சிங்களவரைக் கதிகலங்கச் செய்துள்ளது. எம்முடன் இணைந்ததையிட்டுச் சிங்களத் தலைமைப் பீடமும் சிங்கள முதலாளிகள் நடத்துகின்ற [illegible] ஊடகங்களும் நயவஞ்சக அறிவுரைகளை அவருக்கு வழங்கத் தொடங்கியுள்ளன. இதுவே மலையக மக்கள் ஈழத்தமிழ் மக்களுடன் இணைந்துவிட்டால் சிங்களவர் தலை தூக்குவது கடினம் எனச் சிங்களக் கடும்போக்காளர்கள் கருதுவதை எடுத்துக்காட்டுகிறது.

கொழும்பில் பல ஆர்ப்பாட்டங்கள் செய்து தமிழ் மக்களின் கொந்தளிப்பை உலகிற்குக் காட்டிவரும் மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமல்ல இந்தியத் துணைக் கண்டமும் எம் அவலத்தைக் கண்டு அபயக்குரல் கொடுக்க முன்வந்துள்ளது. இதுவரையில் நாம் பட்ட துன்பங்கள், இன்னல்கள், உயிரிழப்புகள், உடமையிழப்புக்கள் ஒன்றும் வீண்போகவில்லை என்பதை உணர்த்தி நிற்கிறது. காலம் கடந்த நிலையிலாவது ஞாலம் எமக்குத் துணை நிற்பது எம் நொந்த - சிவந்த உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் இந்த ஆண்டுக்கான பகல்நேர விரிவுரைகள் எதிர்வரும் 16 ஆம் திகதியும் மாலை நேர விரிவுரைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி. சனிக்கிழமை காலை 8.00 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது எனத் தொழில் நுட்பக் கல்லூரியின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (72)

## ஓய்வூதியர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் —

வலிகாமம் வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (72)

## மாணிக்கவாசகர் விழா

காரைநகர் —

காரைநகர் - மாணிக்கவாசகர் சபை நடத்தும் மாணிக்கவாசகர் விழாவின் இரண்டாம்நாள் நிகழ்வுகள் இன்று இரவு 8.30 மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தின் வசந்தமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்காரைநகர் கம்பன் கழகத் தலைவர் த.சிவகுமாரன் மணிவாசகத்தில் ஒருவாசகம் என்ற தலைப்பிலும் தாயிற் சிறந்த தயவான சத்துவனே என்ற தலைப்பில் சித் தாந்த வித்தகர் வேலுப்பிள்ளை நடராசரும் சொற்பொழிவு நிகழ்த்துவர்.


மனோகரா யாழ்ப்பாணம்

சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த ஆறு

காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30, (புதிய நேரம்)

அதிரடிப் பொங்கல் வெளியீடு

இளைய தளபதி விஜய், திரிஷா (வருகிறான் வரிப்புலி நாதியாய்) மற்றும் பலர் நடிப்பில் ஆதி

தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை - வித்தியாசாகர் இயக்கம் - ரமணா

(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)

காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

உங்கள் சத்தியராஜ் (இருவேடம்) சங்கவி ஆனந்தராஜ் நடித்த அய்யர் I.P.S



பொங்கல் வெளியீடு சிம்பு, ஜோதிகா, விவேக் நடித்த K.S.ரவிக்குமாரின் சரவணா

காட்சிகள்:-10.30,2.00மட்டும் (பு.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

அர்ஜுன், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த ஆணை



எமது மகத்தான பொங்கல் வெளியீடு!

அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த பரமசிவன்

காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், கௌசல்யா, நாசர் நடித்த பிரியமுடன்

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)


## கூத்தரங்கு சஞ்சிகை வெளிவந்துள்ளது

சுதுமலை —

செயல்திறன் அரங்க இயக்கத்தினால் அரங்கியல் சார் சஞ்சிகையான கூத்தரங்கின் இரண்டு இதழ்கள் வெளிவந்துள்ளன.

குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய நந்தியின் பின்னவனாக நின்று நாடகத்தை ஒரு கணம் நோக்கும்போது என்ற கட்டுரையும், பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய எனது படைப்பாக்கத்தின் திறன் வானொலி நாடகங்களில்தான் வெளியிடப்பட்டது, முனைவர் கோ.இரா. இராசாரவிவர்மாவுடனான நேர்கணல் ஆகிய ஆக்கங்களுடன், அரங்கியல் சார் பல்வேறு குறிப்புக்களையும் உள்ளடக்கியதாக 8ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

கூத்தரங்கின் 9 ஆவது இதழில் உயிர்த்த மனிதர் கூத்து, கவிஞர் இ.முருகையனின் மனிதர்கள் உயிர்க்க வேண்டும் என்ற கட்டுரையும் மன்ரெஸ்ரரின் நாடகவியலாளர்கள் யுத்த காலத்திலும் இலங்கையில் தொடர்ந்தும் நாடகத்துறையில் ஈடுபட்டுள்ளனர் என்ற தலைப்பிலும் பல்வேறுபட்ட ஆக்கங்களுடன் இன்னும் பல தகவல்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (91)

## கரணவாயில் கைகலப்பு மூன்று பேர் காயம்

வடமராட்சி —

கரணவாயில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் பந்து காணிக்குள் விழுந்ததையடுத்து ஏற்பட்ட கைகலப்பில் மூன்று பேர் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமைகரணவாய் அண்ணா சிலையடிப்பகுதியில் நடைபெற்றது. அண்ணா சிலையடியைச் சேர்ந்தவர்களான அன்னலிங்கம் அன்பழகன் (வயது 41), அரியகுட்டி ஜெகன் (வயது 20), சின்னத்தம்பி தவராசா (வயது 48), ஆகிய மூவருமே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் அண்ணா சிலை[illegible]டிப் பகுதியிலுள்ள மைதானம் ஒன்றில் விளையாடிக்கொண்டிருந்தவேளை பந்து அருகிலுள்ள காணிக்குள் விழுந்தது. விழுந்த பந்தினை எடுக்கச் சென்றவேளை காணிச்சொந்தக்காரருக்கும் இளைஞர்களுக்குமிடையே வாய்த் தகராறு ஏற்பட்டு கைகலப்பாக மாறியதில் மேற்படி நபர்கள் காயமடைந்தனர். (12)

## தைப் பொங்கல்தின விழா

[illegible]ாவடி —

தாவடி ஸ்ரீ ராமகிருஸ்ண சேவாச்சிரமத்தினர் நடத்தும் தை பூரணத் திருவிழா நாளை காலை 9.30 மணிக்கு இணுவில் பொது நூலக சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இணுவில் பொது நூலக தலைவர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்புரையினை ஸ்ரீ இராமகிருஸ்ண சேவாச்சிரம இணைச் செயலாளர் சி.சிவமோகன் - இராமகிருஸ்ண மிஷனின் கொள்கைகளும் குறிக்கோள்களும் என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை தொடர்பான எழுந்திரு விழித்துக்கொள் என்ற தொனிப்பொருளிலான கண்காட்சியும், எழுமின் விழுமின் என்ற தொனிப்பொருளில் வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்படும்.

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பிரிவினால் 2005/2006 ஆம் கல்வி ஆண்டுக்கான கலைமுதற் தேர்வு, வர்த்தக முதற்தேர்வு ஆகிய கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கும் மக்கள் வங்கி கிளையில் பற்றுச்சீட்டைப் பெற்று அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புமாறு உதவிப் பதிவாளர் பிரபாகரன் கேட்டுள்ளார். (72)

## தேவாரத்திரட்டு முற்றோ[illegible]ல்

இணுவில் —

அகில இலங்கைத் திருமறை மன்றம் நடத்தும் மாதாந்த பூரணை தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

## மணல் விநியோகம் இடைநிறுத்த[illegible]

வடமராட்சி —

மணல் விநியோகம் இரு தினங்களுக்கு இடைநிறுத்தியிருப்பதாக வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

இன்றும் நாளையும் மணல் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் அதன்பின்னர் விடுமுறை என்ற காரணத்தால் எதிர்வரும் 16 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

மலரவிருக்கும் 14-01-2006 தைப்பொங்கல் நாளிலிருந்து

தமிழரின் தாயக மண்ணில் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழ்ப்பெயர் சூட்டப்படின்

தமிழீழ வைப்பகம் [illegible] கணக்கு

தொடங்கி வழங்கவுள்ளது. விளக்கங்களை அருகில் உள்ள தமிழீழ வைப்பகக்கிளைகளில் பெற்றுக்கொள்ளவும்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

## ...ர்தலில் ...ந்து போட்டியிட ...பு விடப்படும்!

### ...ட்ண தகவல்

கொழும்பு—

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கப்படுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச் [illegible] ...ர்வரும் உ... ...ராட்... மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுவது தொடர்பாக, ஜே.வி.பியுடன் பேச்சு நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்ன[illegible] ...ணியின் செயலாளர் டி.எம் ஜயரட்ண, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த ஆகிய அமைச்சர்கள் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 21 ஆம் திகதி முடிவடைந்த பின்னர், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் மற்றைய கட்சிகளின் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் பிற கட்சிகளின் வேட்பாளர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்படுவர் எனவும் அமைச்சர் டி.எம்ஜயரட்ண மேலும் தெரிவித்தார். (தே)

## ஜனாதிபதி செயலாளரின் கிளிநொச்சி விஜயம் ரத்து!

கொழும்பு—

அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கிளிநொச்சிக்கான பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

லலித் வீரதுங்க தலைமையிலான ஒரு குழுவினர் இந்த வாரம் கிளிநொச்சிக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும், புலிகளிடமிருந்து இது தொடர்பாக எந்தப் பதிலும் கிடைக்காத நிலையில் அவர்களின் பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக அரச தரப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளிடமிருந்து உரிய பதில் கிடைத்த பின்னர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி செல்வார்கள் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## சிறையில் பெற்றோரை சந்தித்தார் அரித்திரா!

சென்னை—

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் முருகன் - நளினி தம்பதிகளின் மகள் அரித்திரா தனது பெற்றோரைச் சந்தித்து உரையாடினார்.

9 வருடங்களுக்குப் பின்னர் உணர்ச்சி மயமாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 14 வயதான அரித்திரா, முருகனின் தாயாருடன் இலங்கையில் வசித்து வந்தார். கடந்த வாரம் இவருக்கு இந்திய அரசு விசா வழங்கியதையடுத்து தமிழகத்துக்குச் சென்று தனது பெற்றோரைச் சந்தித்தார்.

இவருடன் நளினியின் தாயாரும், சகோதரனும் சிறைக்குச் சென்று பார்வையிட்டிருந்தனர். இவர்களது விஜயம் பாதுகாப்புக் காரணங்களுக்காக மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

## கொழும்பு பொலிஸ் நிலையங்களை தாக்குவதற்கு புலிகள் திட்டமாம்!

கொழும்பு—

கொழும்பு நகரில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் புலனாய்வுப்பிரிவு தெரிவித்ததாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல்களுக்காக கொழும்பு நகரில் விடுதலைப் புலிகள் 10 பொலிஸ் நிலையங்கள் அல்லது காவலரண்களைத் தெரிவுசெய்துள்ளதாக, பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலைடுத்து - பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ, கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பொலிஸ் நிலையங்களை உஷார்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் நிலையங்கள் மற்றும் காவலரண்களை பலப்படுத்தவும், சந்தேகத்துக்கிடமானவர்கள் மற்றும் வாகனங்களைச் சோதனையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (தே)

## ரணில் விக்கிரமசிங்கவை நீக்க நாற்பது எம்.பிக்கள் ஆதரவு!

கொழும்பு—

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பொறுப்பில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு, கருஜெயசூரியவை அந்தப் பொறுப்பில் நியமிப்பதற்கு 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

13 தேர்தல்களில் தோல்வியடைந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக மறுசீரமைப்புச் செய்து, அதன் தலைவரை நீக்குவதற்குத் தாங்கள் போராடவுள்ளதாக அந்தக் கட்சியைச்சேர்ந்த 20நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையைத்தொடர்வதற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பாராயின் வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியை கைவிட்டு முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார்கள் என்றும் ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.



கட்சி மறுசீரமைப்பின் போது கட்சியின் பிரதித்தலைவருக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்கும், ஏனைய முக்கிய தலைவர்களுக்கு சில பொறுப்புகளை வழங்குவது குறித்தும் ரணில் விக்கிரமசிங்க, பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜித சேனாரத்ன, காமினி லொக்குகே, ருக்மன் சேனாநாயக்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பும் நடைபெற்றது.

## வட - கிழக்கு வேட்பு மனுக்களை ரத்துச்செய்ய அரசு நடவடிக்கை!

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை ரத்துச் செய்வதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அரசாங்கத்தின் இந்த முடிவை அறிவித்தார்.

உள்ளூராட்சி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, அமைச்சர்கள் தினேஷ் குணவர்த்தன, டியூ குணசேகர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை ரத்துச்செய்வது தொடர்பாக அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விசேட பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, வடக்கு - கிழக்கு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் ஒரே நாளிலேயே உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## படையினர் மீது விசாரணைக்கு உத்தரவிட்டமைக்கு கண்டனம்!

திருகோணமலை—

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக படையினர் மீது விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டதற்கு வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டுக்கமைய படையினர் மீது விசாரணை நடத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்தி வழமையான வாழ்க்கை முறையில் தடங்கல்களை ஏற்படுத்தும் மூன்றாம் தரப்புதான் இந்தக் கொலைகளின் பின்னால் உள்ளது.

இந்த நிலையில் படையினருக்கு எதிராக விசாரணைகளை நடத்துவது அவர்களின் மன உறுதியைக் குலைப்பதாக அமையும்.

கடந்த அரசாங்கம் மேற்கொண்ட மிலேனியம் சிற்றி காட்டிக்கொடுப்பை விட இது பெரிய காட்டிக்கொடுப்பாக அமைந்துவிடும்.

எனவே, படையினருக்கு எதிரான விசாரணைகளை உடன் நிறுத்த வேண்டும் என்று அந்த அமைப்பு கேட்டுள்ளது.

### முனசிங்க நீக்கம்

கொழும்பு—

இராணுவத்தின் விஜயபாகு காலாட்படைப்பிரிவின் பிரதம தளபதியாக பிரிகேடியர் ரஜித சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவியிலிருந்த மேஜர் ஜெனரல் உதேனி முனசிங்க இராணுவத்தளபதியால் நீக்கப்பட்டுள்ளார்.

தற்போது இராணுவச் செயலராகப் பதவிவகிக்கும் பிரிகேடியர் ரஜித சில்வா அதற்கு மேலதிகமாக இந்தப் பதவியையும் வகிக்கவுள்ளார்.

## திஸநாயக்கவின் எம்.பி பதவியை பறிக்க நடவடிக்கை எடுக்காததேன்?

### விமல் வீரவன்ச கேள்வி



கொழும்பு—

சிறையில் உள்ள ஐ.தே.கட்சியின் பிரதம அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை காலாவதியான போதும், அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து ஜே.வி.பி பிரசார செயலர் விமல் வீரவன்ச விசனம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் உரையாற்றும்போதே விமல் வீரவன்ச இது குறித்து விசனம் தெரிவித்தார்.

ஒரு வருட காலம் நாடாளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்காவிடின் இயல்பாகவே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் உறுப்புரிமை காலாவதியாகிவிடுகிறது.

இந்தவகையில் சிறையிலுள்ள எஸ்.பி.திஸநாயக்கவின் உறுப்புரிமையும் காலாவதியாகிவிட்டது. ஆயினும் நாடாளுமன்றில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இது குறித்து தேர்தல் ஆணையாளருக்கு உரிய வகையில் அறிவிக்கப்படவில்லை.

இது குறித்து பிரதி சபாநாயகர் உரிய விசாரணைகளை நடத்த உத்தரவிட வேண்டுமென்று விமல் வீரவன்ச கேட்டுக்கொண்டார்.

## 200 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரியுள்ளார் ஞானக்கோன்!

கொழும்பு—

அரசாங்கம் தம்மை சட்டவிரோதமாகச் சிறையிலடைத்து வைத்தமைக்காக அவுஸ்ரேலிய கோடீஸ்வர தமிழ் வர்த்தகர் சாள்ஸ் ஞானக்கோன் 200 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரியுள்ளார். சாள்ஸ் ஞானக்கோனின் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா இது தொடர்பாகத் தெரிவிக்கையில் -

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு இது தொடர்பாகத் தனித்தனியாக எழுத்து மூலமான உத்தரவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து 100 மில்லியன் ரூபாவையும், சட்ட விரோதமாகத் தம்மைக் கைதுசெய்த பொலிஸ்மா அதிபரிட மிருந்து 100 மில்லியன் ரூபா நஷ்டஈட்டையும் ஞானக்கோன் கோரியுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி எதுவித காரணமுமின்றி ஞானக்கோன் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற மேன்முறையீட்டினால் நவம்பர் 30 ஆம் திகதி விடுவிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது கைதானது சட்டவிரோதமானது மட்டுமல்ல, நியாயமற்றது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்துக்குள் ஞானக்கோனின் கோரிக்கைக்குப் பதிலளிக்காது விட்டால் - கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குத் தொடரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்வதற்குத் தயார்!

## சச்சின் டெண்டுல்கர் கூறுகிறார்

லாகூர்—

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ளத் தயார் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான போட்டி குறித்து நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் சச்சின் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

டெஸ்ட் போட்டித் தொடர் இரு அணிகளுக்குமே சவாலான விடயம்தான். தொடர் முழுவதும் நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் தான் வெற்றிபெறமுடியும்.

வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான மைதானங்களில் ஓட்டங்களைக் குவிக்க வீரர்கள் தங்களைத் தயார் படுத்திக்கொண்டுள்ளனர்.

இந்தத் தொடரில் அக்தர் பற்றியே அனைவரும் பேசுகின்றனர். ஆனால், பாகிஸ்தான் அணியின் அக்தர் மட்டுமல்லாது வேறுசில சிறப்பான பந்து வீச்சாளர்களும் இடம்பெற்றுள்ளனர். அதனால் யாரையும் குறைத்து எடை போடமுடியாது.

டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற வேண்டுமென்றால் போட்டியின் ஐந்து நாட்களும் நன்றாக ஆட வேண்டியது மிகமுக்கியம். என்னுடைய குறிக்கோள் எப்பொழுதும் நன்றாக ஆடுவது மட்டுமே.

15 வருடங்கள் கழித்து 2004 இல் நாங்கள் இங்கு வந்தோம். அந்தத் தொடரில் நாங்கள் வெற்றியும் பெற்றோம். ஆனால், அப்பொழுது நாங்கள் கராச்சியில் விளையாடவில்லை. இம்முறை நான் அறிமுகமான காரச்சி மைதானத்தில் டெஸ்ட் போட்டியை மீண்டும் 17 வருடங்கள் கழித்து விளையாடப் போவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்தியாவுக்காக போட்டிகளில் விளையாடப்போவது மட்டுமே வீரர்களின் இலட்சியமாக இருந்து வருகி



றது.

போட்டிகளில் விளையாட ஆரம்பித்த பின் எதிரணி, பாகிஸ்தான் என்றெல்லாம் வீரர்களுக்கு கவலைகள் கிடையாது. எல்லாத் தொடரையும் போல இந்தத் தொடரும் முக்கியமானதுதான் என்று தெரிவித்தார்.



இந்திய - பாகிஸ்தான் தொடருக்கான கிண்ண அறிமுக நிகழ்வில் இரு நாட்டு அணித் தலைவர்களும்...

வி...

நா...

சிட்னி-

அ...

நாள்...

ஆகிய...

# இங்கிலாந்து அ... ...டுத்தமாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம்!

லண்டன்—


இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்திய கிரிக்கெட் அணி தற்போது பாகிஸ்தானில் சுற்றுப்பயணம்செய்து விளையாடிவருகிறது. இரு அணிகள் இடையேயான தொடர் பெப்ரவரி 19 ஆம் திகதி முடிவடைகின்றது.

இதையடுத்து இங்கிலாந்து கிரிக்கெட் அணி பெப்ரவரி மாதம் 3 ஆவது வாரத் தொடக்கத்தில் இந்தியா வருகிறது. அந்த அணி இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடும்.

இதன்முலம் டெஸ்ட் போட்டி மார்ச் மாதம் 1 ஆம் திகதி நாக்பூரில் தொடங்குகிறது. இந்த டெஸ்ட் 5 ஆம் திகதிவரை நடைபெறும். இதைத்தொடர்ந்து 2 ஆவது டெஸ்ட் மொகாலியிலும், கடைசி மற்றும் 3 ஆவது டெஸ்ட் மும்பையிலும் 18 ஆம் திகதி நடைபெறும்.

இதையடுத்து ஒருநாள் போட்டித் தொடர்நடைபெறும். இதன் முதற்போட்டி டெல்கியில் 28 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடர் ஏப்ரல் 15 ஆம் திகதி முடிவடைகிறது.

விளையாட்டு



போட்டி அட்டவணை

மார்ச் 1-5 முதல் டெஸ்ட் - நாக்பூர்
மார்ச் 9- 13 இரண்டாவது டெஸ்ட் - மொகாலி
மார்ச் 18 - 22 மூன்றாவது டெஸ்ட் - மும்பை
மார்ச் 28 - 1 ஆவது போட்டி - டெல்கி
மார்ச் 31- 2 போட்டி - பரிதாபாத்
ஏப்ரல் 3- 3 ஆவது போட்டி - கோவா
ஏப்ரல் 6- 4 ஆவது போட்டி - கொச்சின்
ஏப்ரல் 9- 5 ஆவது போட்டி - கவுகாத்தி
ஏப்ரல் 12- 6 ஆவது போட்டி - ஜாம்ஷெட்பூர்
ஏப்ரல்15- 7 ஆவது போட்டி - இந்தூர்.

# 11 பேர் கொண்ட இந்திய அணியில் கங்கூலிக்கு இடம் கிடைக்குமா?

## மழுப்புகிறார் ராவிட்

லாகூர்—

பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணியின் 11 பேரில் கங்கூலி இடம்பெறுவாரா என்று இப்போது கூறமுடியாது என்று அணித் தலைவர் ராவிட் கூறியுள்ளார்.

லாகூரில் நேற்றுமுன்தினம் நிருபர்களுக்குப் பேட்டியளித்த இந்திய கப்டன் ராவிட்:-

அப்போது அவரிடம் போட்டி தொடங்கும்முன் அறிவிக்கப்படும் 11 பேர்கொண்ட இந்திய அணியில் முன்னாள் கப்டன் கங்கூலிக்கு இடம் கிடைக்குமா என்று நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு ராவிட் மழுப்பலான பதில் அளித்தார்.

அணியில் ஆடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் 11 வீரர்கள் குறித்து இப்போதே எதுவும் கூறமுடியாது. அது பற்றிச் சிந்திக்கவேயில்லை. தற்போதைய நிலையில் இந்திய அணியில் இடம்பெற்றிருக்கும் அனைவருமே ஆடுவதற்குத் தகுதியானவர்கள்தான்.

ஆடுகளம், மைதானத்தின் தன்மை போன்ற விடயங்களைக் கவனித்த பின்னரே அணியின் வீரர்களை முடிவுசெய்வோம்.

பொதுவாக நல்ல ஆட்டத்தை தர வேண்டும் என்பதில் வீரர்கள் உறுதியுடன் உள்ளனர். இருதரப்பு ரசிகர்களுக்கும் உற்சாகத்தைத் தருவதாக ஆட்டம் அமையும்.

இந்திய அணி அதிக ஓட்டங்களைக் குவித்தாகவேண்டும். அப்போதுதான் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்குதலைத் தரமுடியும். கடந்த ஆண்டு இதுபோன்றுதான் செயற்பட்டோம். இப்போதும் அப்படி ஆடினால் தான் முடியும். இந்திய - பாகிஸ்தான் தொடரை உலகமே உன்னிப்பாகக் கவனிக்கும். ஆக, இந்தத் தொடரை சுவைமிகுந்ததாக மாற்றுவோம் என்றார் ராவிட்.

இதேவேளை, இந்திய அணியில் 3 சிறந்த தொடக்க வீரர்கள் உள்ளனர். இருப்பினும் இதில் ஒருவரை விலக்கிவைக்கவேண்டிய அவசியம் உள்ளது. யாரைச் சேர்ப்பது என்பதைவிட - யாரை விலக்கிவைப்பது தான் என்பது சுவைமிக்க விடயமாக இருக்கும். கங்கூலி முன்னாள் கப்டன் என்பதற்காக அவருக்கு தனிச்



சலுகை எதுவும் காட்டப்படமாட்டாது என இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல் தெரிவித்தார்.




இந்திய - பாகிஸ்தான் தொடரில் பங்கேற்கும் இந்திய வீரர் டோனி பயிற்சியில் ஈடுபட்டிருக்கையில்...

# கொலம்பிய வீரர் சுட்டுக்கொலை!

பொகோட்டா—

கொலம்பிய தேசிய உதைப்பந்தாட்ட அணியின் முன்கள வீரர் எல்சன் பெசிரா (27) மற்றும் அவரது நண்பரை அடையாளம் தெரியாத நபர்கள் சுட்டுக்கொன்றனர்.

திங்கட்கிழமை இரவு - இரவு விடுதி ஒன்றில் எல்சன் தனது நண்பர் அலெக்சாண்டர் ரியாஸுடன் நடனமாடிக்கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நேரிட்டது. மர்மநபர்கள் எல்சன் மீது 4 முறை துப்பாக்கியால் சுட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சில தினங்களுக்குமுன் எல்சனும் அவரது நண்பரும் இதே இரவுவிடுதியில் சிலருடன் சர்ச்சையில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது.

சர்ச்சையில் ஈடுபட்ட நபர்கள் தகுந்த சமயத்தை எதிர்பார்த்து டிஸ்கோ நடனம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எல்சனையும் அவரது நண்பரையும் சுட்டுக் கொன்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கொலம்பியாவின் முன்னணி வீரராகத் திகழ்பவர் எல்சன் பெசிரா என் பது குறிப்பிடத்தக்கது.

# இன்சமாமுக்கு மட்டுமல்ல பாகிஸ்தானுக்கே காய்ச்சல்

கராச்சி—

எனக்குமட்டுமல்ல, பாகிஸ்தான் முழுவதும் கிரிக்கெட் காய்ச்சல் அடித்துக் கொண்டிருக்கிறது என்று பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகொண்ட தொடரில் முதல் ஆட்டம் நாளை லாகூரில் தொடங்கவுள்ளது. இந்தநிலையில் காய்ச்சலால் அவதிப்பட்டுவரும் பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

உடல்நலக் கோளாறுகளுக்காக நான் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆடாமல் இருக்கமாட்டேன். காய்ச்சலால் நான் அவதிப்பட்டு வருகிறேன். நான் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் பாகிஸ்தானின் ஒட்டுமொத்த மக்களுக்கும் கிரிக்கெட் காய்ச்சல் பிடித்துள்ளது. இந்திய அணி பாகிஸ்தானுக்கு வந்துள்ள இந்தநேரத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள இந்தக் காய்ச்சலை நான் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. எனக்கு இருமல் உள்ளது. ஆனால், அது நோயே கிடையாது. இதற்காக நான் டெஸ்டில் ஆடமாட்டேன் என்று கூறமுடியாது.

இந்தக் குளிர்கால சீதோஷண



நிலையில் முறையான, பாதுகாப்பான உடைகளை அணியாததால் சளி பிடித்துள்ளது. இந்தியாவுக்கு எதிராக வெற்றி பெறுவதையே குறியாகக்கொண்டு பயிற்சி முகாமில் செயற்பட்டோம்.

பக்ரீத் பண்டிகை என்பதால் அணி வீரர்களுக்கு இரண்டு நாள் விடுமுறை விடப்பட்டுள்ளது. ஆனால், நான் பயிற்சி முகாமில்தான் உள்ளேன்.

கப்டனான நான் மற்ற வீரர்களுக்கு முன் உதாரணமாக இருந்து அணியை வழிநடத்திச்செல்லவேண்டும் என்பதால், நான் எனது வீட்டுக்கு இந்த விடுமுறை நாட்களில் செல்லவில்லை என இன்சமாம் மேலும் தெரிவித்தார்.

# பயிற்சி ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி

மெல்பேர்ன்—

அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை ஆகிய 3 நாடுகள் இடையிலான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த நிலையில் கடைசிப் பயிற்சி ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி, குயீன்ஸ்லாந்து அணியை 94 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக டிப்பென்னர் 80 ஓட்டங்களும், ருடோல்ப் 50 ஓட்டங்களும் எடுத்தனர்.

பின்னர் ஆடிய குயீன்ஸ்லாந்து அணி 28 ஆவது ஓவரில் 111 ஓட்டங்களில் சுருண்டது. இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 94 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக அண்டி பிக்சல் 37, ஓட்டங்களும், நதன் ஹவுரிட்ஸ் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# மிதிவெடி அகற்றும் கருவிகளை ஒப்படைப்போருக்கு சன்மானம்!

யாழ்ப்பாணம் —

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்திலிருந்து காணாமல் போன மிதிவெடி அகற்றும் கருவிகளைத் திருப்பி ஒப்படைப்போருக்கு அல்லது அது தொடர்பான தகவல்களைத் தருவோருக்கு கணிசமானதொரு தொகையைச் சன்மானமாக வழங்குவதற்கு அந்த நிறுவனம் முன்வந்துள்ளது.

கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி இந்த நிறுவனத்தின் வளாகத்திற்குள்ளும், அலுவலகத்திற்குள்ளும் உட்புகுந்த குழுவொன்று அங்கிருந்த ஒரு கணினி, 43 உணர்கருவிகள், ஆறு வானொலித் தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் மின்கலங்கள் சிலவற்றைச் சூறையாடிச் சென்றனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் அவர்கள் சந்தேகத்திற்குரியவர்களின் வீடுகளுக்குச் சென்று தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு, கைது நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இருந்த போதிலும் சூறையாடப்பட்ட கருவிகள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

தமது நிறுவனமானது தமிழ் மக்களின் நலன் கருதி மிதிவெடி அச்சுறுத்தல்களை நீக்குவதன் மூலம், அவர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வழி செய்து கொடுக்கிறது என்றும் -

எனவே, இக்கருவிகள் இருக்கும் இடம் பற்றி அறிந்திருக்கும் பட்சத்தில் அல்லது இக் கருவிகளை கண்டுபிடிக்க உங்களால் இயலுமானால் தயவுசெய்து ஹலோ ட்ரஸ்ட் அலுவலகத்துக்கு சமுகமளித்து அதிகாரியோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது கருவிகளை மீட்டு வந்து ஒப்படைக்குமாறும் மேற்படி நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் கேட்டுள்ளார்.

# சிறுவர்களுக்கான கலைப்பயிற்சி

சுதுமலை —

செயல்திறன் அரங்க இயக்கத்தால் சிறுவர்களுக்கான கலைப் பயிலகம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை ஆடியபாதம் வீதியிலுள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இசைத்துறை சார்ந்த இளம் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் சிறுவர்களுக்கான நுண் கலைப் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது. 8 வயது தொடக்கம் 12 வயது வரையான சிறுவர்களுக்கு மேற்படி பயிற்சிகள் வார இறுதி நாட்களில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடகம், மிருதங்கம், வாய்ப்பாட்டு, நடனம் ஆகிய பாடங்களுடன் மேலைத்தேச இசைக்கருவிகளின் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஆடியபாதம் வீதியிலுள்ள தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (91)

## பற்றைகள் வெட்டி துப்பரவு

மட்டுவில் —

கனகம்புளியடிச் சந்தியில் இருந்து புத்தூர் செல்லும் வீதியின் இரு மருங்கிலுமுள்ள மரக்கிளைகள், பற்றைகள் என்பன படையினரின் அறிவுறுத்தலுக்கமைய பொதுமக்களால் வெட்டித் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

ஆட்களற்ற காணிகளில் நின்ற பற்றைகள் யாவும் அண்மையில் படையினரால் கனரக வாகனங்களின் உதவியோடு அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. (24)

# நெடுந்தீவு மேற்குக்கான மின் விஸ்தரிப்பு பணிகள் ஆரம்பம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்புப் பணிகள் கடந்த வாரம் முதல் இலங்கை மின்சார சபையினரால் முன்னெடுக்கபட்டு வருகிறது.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட நிதிக்கான வேலைகளை இந்த வருடமாவது செய்வதற்கு முன்வந்துள்ளமையையிட்டு- நெடுந்தீவு பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன், இந்த வேலைத்திட்டத்துடன், கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட நிதிகளுக்குரிய இடங்களில் வேலைகளை செய்து முடிக்கவேண்டும் என்றும், பிரதான வீதிக்கான மின்விளக்குகளையும் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, இடையிடையே தற்போது மின் இயந்திரக் கோளாறு எனக் காரணம் காட்டி மின்விநியோகம் நிறுத்தப்பட்டும் வருகிறது.

இந்த நிலைமை தொடர்ந்தும் ஏற்படாத வகையில் நெடுந்தீவு பிரதேசத்துக்கான மின் விநியோகத்தை இலங்கை மின்சார சபையினர் சீரான முறையில் மேற்கொள்ளவேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (113)

## பன்றிகள் அட்டகாசம்

மட்டுவில் —

மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் பன்றிகளின் அட்டகாசம் மீண்டும் அதிகரித்துள்ளது.

கூட்டம் கூட்டமாக இரவில் வரும் பன்றிகள் பனங்கிழங்குப் பாத்திகளை முழுமையாகத் துவசம் செய்துவிடுகின்றன. அத்துடன் நெல்வயல்களில் புகுந்தும் பாரிய அழிவை ஏற்படுத்துகின்றன.

ஏற்கனவே வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவு ஒரு புறமிருக்க, பன்றிகளினால் ஏற்படும் அழிவும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் பெரும் நட்டமடைந்துள்ளனர்.

தற்போதைய பதற்ற சூழ்நிலை காரணமாக- இரவில் வயல் நிலங்களில் காவல் காப்பதும் சாத்தியமற்றுள்ளதெனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (24)

# வருடாந்த ஒன்றுகூடலும் புதிய நிர்வாகசபை தெரிவும்

தென்மராட்சி —

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் -எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலரும் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமான செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில், இடமாற்றலாகிச் சென்ற இளைப்பாறிய அலுவலர்களுக்கான பிரிவுபசாரமும் இடம்பெறவுள்ளது.

புதிய பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னராகக் கழகச் செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படியும் கோரப்பட்டுள்ளது. (24)

# புங்குடுதீவில் கடற்தொழிலாளருக்கு தற்காலிகமாகவே தொழில் அனுமதி

புங்குடுதீவு —

புங்குடுதீவு பிரதேச கடற்தொழிலாளர்களுக்கு தொழில் செய்வதற்கான அனுமதி இவ்வருடம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையும் தற்காலிகமாகக் கடற்படையினரால் வழங்கப்பட்டுள்ளது.

வழமையாக ஒரு வருட காலத்துக்கு வழங்கப்படும் இந்த அனுமதிப்பத்திரம் தற்போது 14 நாட்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. தமது தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை இடைநிறுத்தி, வரையறைக்குட்படுத்தியுள்ள இந்தச் செயற்பாட்டால் புங்குடுதீவுப்பகுதி மீனவர்கள் பெரும் விசனமடைந்துள்ளர்.

இதேவேளை, கடந்த மாதம் புங்குடுதீவுப் பகுதியில் இடம் பெற்ற இளம்பெண் மீதான பாலியல் வல்லுறவு கொலையைக் கண்டித்து புங்குடுதீவுப் பிரதேச மக்கள் கடற்படையினரது பொது மக்கள் தொடர்பகத்தை உடைத்து நொருக்கினர்.

இதைத் தொடர்ந்து, கடற்படையினர் புங்குடுதீவுப் பிரதேச மக்கள் மீதும், கடற்தொழிலாளர்கள் மீதும் கெடுபிடிகளைப் பிரயோகித்து, மக்கள் தமது அனுமதியைப் பெற்றே தொழில் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை விதித்ததுடன் குறுகிய நாள் அனுமதியைத் தந்துள்ளதாகவும் அந்தப் பகுதி தொழிலாளர்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர். (113)







# கலைக் கோட்டம் திறப்புவிழா நிகழ்வு

சுதுமலை —

திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்டம் கட்டடத் தொகுதி திறப்புவிழா - எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் டேவிற் வீதியில் இடம் பெறவுள்ளது.

முன்னாள் யாழ்ப்பாண மறைக் கோட்ட குரு முதல்வர் ஜே.பி. ஈ.செல்வராசா அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத் தொகுதிகளைத் திறந்துவைக்கவுள்ளார்.

நுண்கலைகள் பயில்வதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கலைத்தூது அழகியல் கல்லூரியுடன் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறை, மாநாட்டு மண்டபம் போன்றவற்றை நடத்தக்கூடிய பல வசதிகளைக் கொண்டமைந்த 3 மாடிக் கட்டடமே கலைக்கோட்டமாக திறந்துவைக்கப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்ற 40 ஆண்டு வரலாற்றில் 1980 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட கவின்கலைப் பயிலகம் 25 வருட வளர்ச்சியில் கலைத்தூது அழகியல் கல்லூரியாக இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

# நடைபாதைக் கடைகள் மீளவும் இயங்க ஆரம்பம்

கொக்குவில் —

நடைபாதைக் கடைகள் மீண்டும் யாழ்.நகர வீதியோரங்களில் தலைகாட்டி இப்பொழுது நடை பாதைகளை முற்றுமுழுதாக ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

இதனால் மீண்டும் பஸ் நிலையத்தில் இறங்கி யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு ஆளாக நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட தனியார் ஊர்திகள் பிரயாணிகளை ஏற்றுவதற்காக மெதுவாக கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய வீதிகளில் செலுத்தப்படுவதாலும், ஏனைய சைக்கிள், மோட்டார் சைக்கிள், வாகனங்களில் செல்வோரது போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்பட்டு வருவதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போதைய சட்டம், ஒழுங்குகள் பாதிக்கப்பட்ட நிலையால் சகலரும் தம்போக்கில் நடந்து கொள்ளும் நிலைகளால் யாழ். நகரப் போக்குவரத்து மீண்டும் பாரிய சீரழிவுக்கு உள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது. (206)

# இருவரைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் புகார்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் இரண்டு பேர் காணாமற்போயுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இளவாலை விநாயகர் வீதியைச் சேர்ந்த மரியநாயகம் மதுரநாயகம் கிறிஸ்ரின் (வயது 31) யாழ். 6 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த எட்வேட் மரியமலர் (வயது 45) ஆகிய இருவரையும் காணவில்லை என யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் எட்வேட் மரியமலர் என்பவரைக் கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை எனவும், மதுரநாயகம் கிறிஸ்ரின் கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் தனது சகோதரியின் வீட்டிலிருந்து தாய் வீட்டுக்குச் சென்றதாகவும், அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். மணிக்கூட்டு வீதியால் வாகனங்கள் செல்லத் தடை!

கொக்குவில் —

யாழ்.மணிக்கூட்டு வீதியால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் சென்று வருவதைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதனால், அப்பாதையைப் பயன்படுத்திய இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் வேறு வீதிகளால் செல்கின்றன.

யாழ்.மத்திய கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் இதனால் பெரிதும் சிரமங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கால்நடையாகவும் மற்றும் வாகனங்களில் செல்கின்ற மாணவர்கள் வேறு பாதைகளால் சுற்றியே கல்லூரியை அடையும் அவலம் தோன்றியிருப்பதால், தாமதமாகவே கல்லூரியை சென்றடைய நேர்வதாகவும் கூறப்படுகிறது. (206)

# சின்னஞ்சிறு செய்திகள்

## அலங்கார உற்சவம்

தென்மராட்சி —

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு வேதவன விநாயகப் பெருமான் ஆலயத்தில் தற்போது நடைபெற்றுவரும் திருவெம்பாவை அலங்கார உற்சவத்தில் இன்று காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், நாளை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இந்த இரு நாட்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் எனவும் ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த ஆலயத்தில் திருவாதவூரடிகள் புராணப் படிப்பும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (24)

## தென்மராட்சியில் தேடுதல்

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி - சரசாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தினர்.

இந்தப் பகுதியிலுள்ள வீடுகளில், வர்த்தக நிலையங்களுக்குள் நுழைந்து தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது வீட்டில் தங்கியிருப்போர் தொடர்பான தகவல்களைச் சேகரித்ததுடன் குடும்ப அட்டைகளையும் பார்வையிட்டனர்.

எனினும் எவரும் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

## இது பற்றிச் சிந்திப்போம்...!

> "அறிவின் மூலம் வலுப்பெற்ற தொழில் திறனைவிட அனுபவ அறிக்கைகள் மூலம் வலுப்பெற்ற தொழில் விருத்தியே உற்பத்தி வீதத்தைத் தூண்டிவிடும்."



# எமது பொருளாதார முறைமைகளை நாமே முகாமை செய்ய முடியாமல் இருப்பதே பின்னடைவுக்குக் காரணம்!

**பொருளியற்துறைப் பேராசிரியர் நித்தியானந்தனுடனான நேர்காணல் சென்றவாரத் தொடர்ச்சி...**

*ஒரு பிராந்திய ரீதியான அபிவிருத்தி என்பது அரசாங்கமுதலீட்டோடு தொடர்புடைய கீழ்க்கட்டுமான உருவாக்கத்திலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது. அந்த வகையில் வடக்கு-கிழக்கு அபிவிருத்தியில் கீழ்க்கட்டுமான முதலீடான அரசினால் இடம்பெற்றதா?*

இது ஒரு பொருத்தமான கேள்வி முதலில் கீழ்க்கட்டுமான முதலீடு என்றால் என்ன என்பது பற்றி வாசகர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இங்கு (வடக்கு-கிழக்கில்) ஒவ்வொரு தனி மனிதனும் தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைத்தான் செய்தான். தத்தமது இயல்தகைமைக்கு உட்பட்ட முறையில் நாங்கள் எல்லோரும் செயற்பட்டிருக்கிறோம். எங்கள் தகைமைக்கு அப்பாற்பட்ட எங்களுக்கு இயலாத விடயங்களில் அரசின் முதலீடும், உதவியும் அவசியமாகின்றது. அதைத்தான் நாங்கள் கீழ்கட்டுமான முதலீடு என்கின்றோம்.

அரசாங்க முதலீடு நீங்கள் கூறியது போல் கீழ்க்கட்டுமான உருவாக்கத்துக்கு அவசியமானது. வடக்கு-கிழக்கில் அரசாங்கங்கள் எவ்வளவு தூரம் கீழ்க்கட்டுமான முதலீடுகளை மேற்கொண்டனஎன்பது வேதனைக்குரிய வேடிக்கை வினாக்களாகவே உருவெடுக்கின்றன.

எங்களுடைய வளங்களை எங்களுக்காக மீட்டு எடுத்துத் தரக்கூடிய ஓர் அரசு எங்களிடம் இல்லாமை, அரச பொருளாதாரக் கொள்கை ஒன்று எங்களுக்குரிய வகையில் இல்லாமை என்பன வடக்கு-கிழக்குக்குரிய வகையில் இல்லாமை என்பன வடக்கு-கிழக்குக்குரிய பேண்தகு அபிவிருத்தியை உருவாக்குவதில் பெரும் தடைகளாக உள்ளன.

தேசிய பொருளாதாரம் என்று கூறிக்கொண்டு இலங்கை அரசாங்கங்கள் இன்னும் எதிர்க்கணியமான முறைகளைப் பின்பற்றிக் கொண்டு இருக்கின்றபோது எவ்வாறு நாங்கள் இங்கே பேண்தகு அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப முடியும்.

*அபிவிருத்திக்குப் பாதகமான உள்ளகப் போட்டி நிலை எமது சமூகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இது பற்றி உங்களது கருத்து என்ன?*

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் வடக்கு-கிழக்கு வளங்களுடன் தங்களை ஊடுதொடர்புபடுத்தி எங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டிருக்கின்றபோது, எமக்குள் நாமே அபிவிருத்திக்குப் பாதகமான வகையில் போட்டியிட்டுக்கொள்கிறோம். இது எங்கள் மத்தியிலான தனிப்பட்ட போட்டியாகும்.

பிரித்தானியர் ஆங்கிலத்தை அரச கரும மொழியாக்கினர். அத்துடன் இங்கு கிறிஸ்தவ மிஷனரிகள் மனித வளங்களை கல்வியூட்டல் மூலம் உருவாக்க முயன்றன. ஆங்கில மொழி தெரிந்த கற்ற ஆளணிக்கான கேள்வி அதிகரித்தது. அந்தக் கேள்வி ஒவ்வொரு தனிப்பட்டோருக்கும் ஏனைய வளங்களுக்குமிடையிலான இணைப்பும் அதனூடாக நாங்கள் பெற்றுக் கொண்டு வந்த பலாபலன்களும் ஓர் உச்ச மட்டத்தை (Optimum level) அடைந்துவிட்டன. அதன் பிறகு வளங்கள் இல்லாதநிலை ஒரு கட்டத்தில் ஏற்பட்டது.

*பேண்தகு அபிவிருத்திக்கு எமதுநாட்டு கல்வி முறைமைகளும் ஒரு தடையாக அமையுமென நான் நம்புகிறேன். கல்வியினை நாம் சமூக-பொருளாதார அபிவிருத்திக்குச் சாதகமாக பயன்படுத்தவில்லை. இதை எப்படி சீர்செய்ய முடியும்?*

இதனை சீர்செய்வது என்பது பாரிய திட்டமிடலுக்கு உட்பட்டது. ஆனால், மனித வளம் ஏன் அபிவிருத்தியாகப் பெறவில்லை என்பதைப் பார்த்தால் எமது கல்வி சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட கல்வியாக இல்லாமையே அதற்குரிய காரணமாக அமைகின்றது. கல்வியை வெறும் பொருளாதார அலகாகவே மட்டும் நோக்கியிருக்கின்றோம். கல்வியை ஈழத்தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான கருவியாகப் பயன்படுத்தவில்லை என்பதும் அரசுகளின் பாதகமான பேண்தகு அபிவிருத்திக்குரிய மார்க்கங்களுக்குத் தடையாக இருந்து வருகிறது.

யாழ்ப்பாணத்தின் சமூக உணர்வு என்பது சாதி முறைமைகள், சமயம் என்பவற்றுக்கு ஊடாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளதே தவிர, எமது சமூகப் பொருளாதார மேம்பாடு சமுதாயத்தை இறுக்கிப் பிடித்து வைத்திருக்கவில்லை. அங்கு ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் இடையில் கடும் போட்டியே நிலவுகின்றது. இதுவே எமக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் என்று கூறலாம்.





*இந்தநிலையில் வடக்கு-கிழக்கு பேண்தகு அபிவிருத்திக்கான தந்திரோபாயம் எப்படி இருக்க வேண்டும்.*

எமது சமூகத்தில் இளம் சந்ததிகள் பெரும்பாலும் கொம்பியூட்டர் படிக்கவென்று தனித்து இறங்கி (தொழிலோடு தொடர்பற்ற ரீதியில்) பெருந்தொகையான பணத்தையும், செயல் திறன் மிக்க இளமைக்காலத்தையும் செலவு செய்கின்றனர். இது தனித்தனி தொழில்சார் ரீதியாக இல்லாது பொதுவாக மேற்கொள்ளும் கற்கை நெறி என்பதால் இதனை எமது பிரதேசத்துக்கான மனிதவள விருத்தி முதலீடு என முக்கியத்துவம் கொடுத்து பெரிதாகப் பார்க்க முடியாது என நான் நம்புகின்றேன். இது பற்றி உங்களது கருத்து என்ன?

இங்கு எவரைக் கேட்டாலும் கொம்பியூட்டர் படித்தால்தான் வேலை கிடைக்கும், ஆங்கிலத்தில் கல்வியூட்டல் செய்தால் வேலை கிடைக்கும் என்று சொல்வார்கள். இவையெல்லாம் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான சில குறுக்கு வழிகளே தவிர, அவை உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய தேவைகளை இங்கு கொடுக்கப் போவதில்லை. நாங்கள் எங்களது வளங்களை இவற்றுடன் இணைப்பதால்தான் உற்பத்தியையும், வேலை வாய்ப்புகளையும் பெருக்கலாமே தவிர, தொடர்பற்ற கற்கை நெறிகள் பெரும்பயனை ஈட்டித்தரப்போவதில்லை.

*யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இங்கு இருக்கின்ற வளங்கள் ஓரளவேனும் ஒருங்கிணைக்கப்பட்டு அபிவிருத்தி நோக்கில் பயன்படுத்தப்படுகின்றதா? இதனை ஒருங்கிணைக்க ஏதாவது அரச உதவி கிடைத்ததா?*

இது மிக முக்கியமான கேள்வி உதாரணத்துக்கு - யாழ். குடாநாட்டை மட்டும் நாங்கள் எடுத்துப் பார்த்தோமானால் பயன்படுத்தக்கூடிய நிலப் பகுதியில் மட்டும் தான் எல்லாமே உள்ளது. நாங்கள் வீடுகளையும், பண்படுத்தக் கூடிய வளமான நிலங்களில் தான் கட்டியுள்ளோம். கல்விக் கூடங்கள், பல்கலைக்கழகம் போன்ற கட்டடங்களையும் அவ்வாறான நிலங்களில் தான் கட்டுகின்றோம்.

இன்று அரசாங்கப் படையினர் உயர் பாதுகாப்பு வலயமென்று தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிலப்பகுதி கூட, பண்படுத்தக்கூடிய வளமான மண்தான். எஞ்சியிருக்கும் வளமான நிலத்தைக்கூட பொருளாதாரச் சிக்கனமற்ற முறையில் துண்டுதுண்டாகப் பிரித்துச் சந்ததிகளுக்குக் கொடுத்து வருகின்றோம்.

சீதன முறைமை இதற்கு ஒரு காரணம் ஆகும். எங்களுடைய பொருளாதார சமூக வாழ்க்கையில் யாழ்ப்பாணத்தில் பார்த்தால், நில வளத்துக்கும் அதற்கிடையில் நெருங்கிய தொடர்பு உடையது என்பதை அவதானிக்கலாம். பருத்தித்துறை வீதியூடாகப் பயணம் செய்தால் சில மைல்கள் செல்ல வல்லை வெளி வருகின்றது.

அங்கு ஏதும் அபிவிருத்தி இத்தனை காலத்தில் நடைபெற்றுள்ளதா? கோப்பாய்- கைதடி வெளியில் ஏதாவது அபிவிருத்தி நடந்துள்ளதா? யாழ்ப்பாணத்தின் தீவுகள் எல்லாவற்றையும் பாருங்கள். எவ்வித அபிவிருத்தியும் நிகழவில்[லை] காரைநகருக்குச் செல்கின்ற பே[...] கல்லுண்டாய்வெளி வருகிற[...] அங்கு ஏதாவது நிழ்ந்திருக்கின்ற[...] அந்தக் காலம் தொடக்கம் அவை எ[ல்]லாம் இருந்தவாறே இருக்கின்றன[...] அபிவிருத்தி எங்கே? வளர்[ச்சி] எங்கே? வளங்களை ஒருங்கிணை[ப்]பதற்கு அரசாங்கங்களின் உத[வி] கிடைத்ததா? பெற்றோலிய எண்ணை வளம் நிறைந்த மத்திய கிழக்கை பாருங்கள். எண்ணெய் வளம் ம[ட்]டுமே அங்கு உள்ளது என அநேக[ர்] கூறுவர். ஆனால், டுபாய் போன்[ற] நாடுகளைப் பார்த்தால் பேரீச்சம்பழ[ம்] மாத்திர மல்ல, எல்லாவகையான பழங்களையும் அங்கு பயிரிடுகின்றார்கள். எவ்வாறு பயிரிடுகின்றார்கள்? பயிர்ச் செய்கைக்குரிய வள[ம்] நிறைந்த மண் அங்கு இயற்கையா[]கவே இல்லை என்றாலும், அவர்க[ள்] அந்த மண்ணை உரிய பொருத்[த]மான நுட்பங்களின் மூலம் வள[ப்]படுத்தியுள்ளனர்.

எவ்வாறு வளமாக்குகின்றார்கள்..? யார்வளமாக்குகின்றார்கள் என்றால் - அரசாங்கத்தின் ஆதரவும், முதல்[ீ]டும் அங்கு வளமற்ற நிலத்தினை வ[ள]மாக்கப் பயன்படுகின்றது. ம[ண்] வளமும் இணைக்கப்பட்டு, இயற்[கை] வளம் உருவாக்கப்பட்டு விவசாய உற்பத்தி அங்கு நடைபெறுகின்றது. அந்த வகையான உருமாற்றம் எங்களைப் பொறுத்த வரையில் இடம்பெறவே இல்லை.

1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ந்தது. அன்றில் இருந்து இன்று வரை எங்களுடைய வளங்களை உரிய முறையில் இணைத்துப் பயன்பெறுவது சாத்தியப்படவில்லை. வடக்கு-கிழக்கு இயற்கை வளங்கள், பௌதிகவளங்கள் பொருத்தமான திட்டமிடலுடன் மனித வளத்துடன் பிணைக்கப்பட வில்லை. அவ்வாறான வகையில் எங்களது பொருளாதார மு[கா]மையோ, திட்டமிடலோ இயங்கி[]ருக்கவில்லை. அவ்வாறாயின் எவ்வாறு நாங்கள் பேண்தகு அபிவிருத்தி பற்றிப் பேசமுடியும்?

*பேண்தகு அபிவிருத்தி பற்றி மிக விரிவாக எமது தொழில் மலர் வாசகர்களோடு பகிர்ந்தமைக்கு எமது நிறுவனத்தின் சார்பில் நன்றியறிதல்களைக் கூறிக்கொள்கின்றேன். இறுதியாக ஏதாவது வாசகர்களுக்கு சொல்லவிரும்புகிறீர்களா?*

இந்தப் பிராந்தியத்தின் பேண்தகு அபிவிருத்திக்கு உரிய முதன்நிலை படிவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையிட்டு நான் கூறியதிலிருந்து உங்களுக்கு ஓரளவு விளக்கம் பெறப்பட்டிருக்கும். உண்மையிலே எங்களுக்கு என்ன தேவை? என்ன எங்களுக்குக் குறையாக உள்ளது என்றால் அதிகாரம் எங்களிடம் இல்லை, அரச இறைமை எங்களிடம் இல்லை. அரச இறைமை எங்களிடம் இல்லாது போனதால் வளங்களை ஒருங்கிணைக்கவும், ஒன்று சேர்க்கவும் கூடிய திட்டங்களை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் எம்மிடம் இல்லாமல் போய் விட்டது. இதனால் எங்களுக்குப் பொருத்தமான தந்திரோபாயங்களை வகுத்து எமது பொருளாதாரத்தை நாமே முகாமை செய்ய முடியவில்லை. இதுவே இறுதியாக நான் கூற விரும்புவது. *முற்றும்.*

**- ஆர்.கே.மேனன் -**

---

# வாரமொரு தொழில் வழிகாட்டி

## கைப்பொறிமூலம் தானியம் அரைத்தல்

*அறிமுகம் :* மின்சார வசதியுடைய நகர கிராமப்புறங்களிலே மின்சார இயந்திர சாதனங்



கள் மூலம் தானியங்கள் அரைக்கப்படுகின்றன. மின்சார வசதியற்ற கிராமப்புறங்களில் கையால் இயங்கும் பொறிமூலம் தானியம் அரைக்கும் தொழிலை மேற்கொள்ளலாம் தானியங்கள் மிளகாய் அரிசி மருந்து மூலிகைகள் ஆகியவை இந்தப் பொறியின் மூலம் அரைக்கப்படலாம்

***தொழில் வாய்ப்பு:-*** மக்களின் அன்றாட வாழ்க்கை தேவையான உணவுப் பொருட்களுக்கான தானியங்கள் அரைக்கப் படுவதால் இடையறாத தொழில் வாய்ப்புண்டு தானியங்களை கொள்வனவு செய்து அரைத்துப் பொதி செய்து விற்பதன் மூலம் தொழில் வாய்ப்பை மேலும் அதிகரிக்கலாம்.

***தொழில்நுட்பம் :*** தொழில்நுட்பம் மிக இலகுவானது இந்தத் தொழிலுக்குத் தேவைப்படும் பொறி மில்லிங் மெசின் என அழைக்கப்படுகின்றது இதனை இயக்குவது மிகச் சுலபமானது இந்தப் பொறியை மரக்குற்றியொன்றில் பொருத்தியபின் அதனைப் பயன்படுத்தலாம்.

***மூலப் பொருட்கள்:*** தானியங்கள் மிளகாய் மருந்து மூலிகைகள்.

***உபகரணங்கள் :*** கையால் இயங்கும் தானியம் அரைக்கும் பொறியை சனசவிய உதவி பெறுநர்களுக்குசுங்கத் தீர்வையின்றி இறக்குமதி செய்து தருவதற்கு இலங்கை அரசவர்த்த பொது கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கும்.

***பொறியின் விலை:*** ரூபா 5000/-

***மாதவருமானம் :*** அண்ணளவாக ரூபா 5000 /- தானியம் ஒரு கிலோ அரைப் பதற்கான கட்டணம் ரூபா 11 மிளகாய் ஒரு கிலோ அரைப்பதற்கான கட்டணம் ரூபா 25 நாளொன்றுக்கு ஒருவர் இந்தப் பொறிமூலம் 20-30 கிலோவரை அரைக்கலாம்.

***குறிப்பு:*** காணி கட்டிடம் ஆகியவற்றின் பெறுமதியோ வாடகையோ முதலீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அரைப்பதற்காக பொருட்கள் வராத காலத்தில் முயற்சியாளர் தாமே பொருட்களைக் கொள்வனவு செய்து அரைத்துப் பொதி செய்து சந்தைப்படுத்தலாம்.

**வழிகாட்டி**




# போட்டிகள் நிறைந்த வணிக உலகில் தகவல் - தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு





சென்றவாரத் தொடர்ச்சி...

**வணிகச் செயற்பாட்டில் இலத்திரனியல் தொடர்பாடல் முறைமையின் பங்கு**

**(The role of Electronic communication system in business activities)**

நிறைபோட்டிகளுடைய வணிகச் சந்தையில் தொடர்பாடல் சாதனங்களின் பங்களிப்பு நிறுவன வெற்றிக்கு அளப்பரிய பங்காற்றுகின்றன. அதாவது - பல்வேறு மூலகங்களிலிருந்தும் பெறப்பட்ட பயனுறுதிமிக்க வியாபாரத் தகவல்களைத் தேவையான நபர்/ நபர்களுடன் உடனுக்குடன் பரிமாற்றம் செய்து பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்கு தொடர்பாடல் சாதனங்கள்- தொடர்பாடல் முறைமை இன்றியமையாததாகும். வினைத்திறன் மிக்க இலத்திரனியல் தொடர்பாடல் முறைமையானது. பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

**ஈ-மெயில் (Electronic Mail/ E-mail)**

வலைப்பின்னலில் இணைக்கப்பட்டுள்ள ஒரு கணினி / தொலைபேசி ஊடாக இன்னொரு கணினி/ தொலைபேசிக்கு தகவல்களை (Data) அல்லது செய்திகளை (Messages) பரிமாற்றம் செய்து கொள்வது மின் அஞ்சல் ஆகும். இதன் மூலம் நிறுவனங்கள் குறைந்த செலவுடன் நிறை தகவல்களை விரைவாக பரிமாற்றம் செய்து கொள்ள முடிகின்றது. குறிப்புக்கள் (Memos) தந்திகள், சுற்றறிக்கைகள், கட்டளைகள், அறிவித்தல்கள் போன்றவற்றை எழுத்து வடிவிலும், ஒலிவடிவிலும் ஈமெயிலினூடாக பரிமாற்றம் செய்து கொள்ள முடிகிறது.

பொது ஈ -மெயிலானது பின்வரும் நன்மைகளை விளைவிக்கின்றது.

- ⇨ விரைவுத்தன்மை
- ⇨ சிக்கனம்
- ⇨ வினைத்திறன்
- ⇨ பாதுகாப்பு
- ⇨ இரகசியம் பேணும் தன்மை
- ⇨ இருந்த இடத்திலிருந்தே தகவல்களைப் பரிமாறல்.
- ⇨ தகவல் பரிமாற்றத்துக்கான Documents களை Word-processing, graphics போன்ற packageகளில்இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்கூறிய நன்மைகளின் பிரதி பலனாக வணிக நடவடிக்கைகளில்E-Mail இன் பயன்பாட்டையும் அதற்கான தேவைப் பாட்டையும் வெகுவாக உயர்த்தியுள்ளது.

**பெ.:க்ஸ்(Fax)**

ஆவணங்கள், தொகுப்புக்கள் என்பனவற்றின் பிரதிகளை இன்னோர் இடத்துக்கு இலத்திரனியல் வடிவத்தில் அனுப்பி, பிரதி எடுத்துக் கொள்ளும் ஓர்முறையே Fax தொடர்பாடலாகும். வணிகக் கடிதங்கள், கட்டளைகள், குறிப்புக்கள், அட்டவணைகள், வரைபடங்கள் போன்றவற்றை தட்டச்சு செய்தோ அல்லது கையால் எழுதியோ ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குத் தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்தி பரிமாற்றம்செய்து கொள்ளும் ஓர் முறையாகும்.

**குரல் அஞ்சல் (Voicemail)**

இலத்திரனியல் அஞ்சல், தொலைபேசி உரையாடல் இவை இரண்டு முறைகளினதும் சிறப்புத்தன்மைகள் ஒன்று சேரப் பெற்றதே குரல் அஞ்சலாகும். அதாவது ஒருவர் பரிமாற்றம் செய்ய வேண்டிய தகவலைத் தொலைபேசியில் தனது குரலிலேயே தெரியப்படுத்தலாம்.

மறுமுனையில் தகவலைப் பெற வேண்டியவர் இருக்க வேண்டியதில்லை. தொலைபேசியில் தெரியப்படுத்தப்படும் தகவலானது - மறுமுனையிலுள்ள Voicemail box என்னும் கருவியில் பதிவு செய்யப்படுகின்றது. தகவல் பெறவேண்டியவர் விருப்பமான நேரத்தில் பதிவாகிய தகவல்களை ஒலிப்பதிவு நாடாவில் கேட்பது போன்று அவரவர் குரலிலேயே கேட்டறிந்து கொள்ளலாம். போட்டிகள் நிறைந்த- தொழில் இரகசியங்கள் பேண வேண்டி வணிக சூழலில் தகவல் பரிமாற் றத்தின் நம்பகத்தன்மை யானது இம்முறையில் உறுதிப்படுத்தப்படுகின்றது.

**இலத்திரனியல் ஒன்றுகூடல் (Electronic meetings)**

Video,Audio தொடர்பாடல் தொழில் நுட்ப முறைகளைக் கையாண்டு, வரையறுக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டி நபர்களுக்கிடையே அல்லது குழுக்களுடைய சந்திப்புக்களை ஏற்படுத்தி சமகாலத்தில் கருத்துக்கள், தகவல்கள், விமர்சனங்கள் என்பனவற்றை பரிமாற்றம் செய்து கொள்ளும் ஓர் முறைமையாகும்.
உ+ம் -

- ⇨ Tele conferencing
- ⇨ Computer conferencing
- ⇨ Video conferencing

ஏனைய துறைகளைக் காட்டிலும் இலத்திரனியல் ஒன்றுகூடலின் (Electronic meeting) பயன்பாடானது வணிகத்துறையிலேயே அதிகமாகக் காணப்படுகிறது. அநேகமாக பல்வேறு நாடுகளிலும் தமது கிளைகளை நிறுவி, வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்தேசியக் கம்பனிகள் (Multinational Companies) போன்ற நிறுவனங்கள் தமது பிராந் திய முகாமையாளர்கள் நிர்வாகிகளுக்கிடையிலான சந்திப்புக்களை இந்தத் தொழில்நுட்பத்தினூடாக மேற்கொள்வதைக் காணமுடியும்.

இந்தத் தொழில்நுட்பத்தினூடாக பின்வரும் நன்மைகளை வணிக நிறுவனங்கள் பெற்றுக் கொள்கின்றது.

❖ முகாமையாளர்கள், நிர்வாகிகள், பங்குபற்றுநர்கள் ஒன்று கூடலுக்காக ஒரே இடத்தில் கூட வேண்டியதில்லை.

❖ முகாமையாளர்கள், நிர்வாகிகள், பங்குபற்றுநர்களின் நேரம் சேமிக்கப்படுவதால் உற்பத்தி அதிகரிக்கின்றது.

❖ ஒன்று கூடுநரின் பிர யாணச் செலவு, சக்தி விரயம் என்பன குறைக்கப்படுகின்றது/ இல்லாமல் போகின்றது.

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியும், நிறுவனங்களின் இலத்திரனியல் வணிகமும்**

**(The growth of in formation and communication technology and organization's E-business)**

தகவல்-தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றகரமான வளர்ச்சியானது நிறுவனங்கள் இலத்திரனியல் வணிகத்தில் ஈடுபட வழி வகுத்தது. இலத்திரனியல் வணிகம் அல்லது மின்னணு வணிகம் என்பது இணையத்தை உள்ளடக்கிய கணனி வலையமைப்புக்கள் மற்றும் தொடர்பாடல் முறைகள் மூலமாகப் பொருட்கள், சேவைகள் தகவல்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதையும், விநியோகம் செய்து கொள்வதையும் விளக்கும் ஓர் வளர்ந்து வரும் எண்ணக் கருவாகும். இது 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இலத்திரனியல் நிதி மாற்றம் (E-Fund Transfer) போன்ற புத்தகங்களுடன் ஆரம்பமானது எனலாம்.

ஆரம்பத்தில் இதன் பிரயோகமானது மட்டுப்படுத்தப்பட்டதாக பெரிய கூட்டுத்தாபனங்கள், ஒரு சில சிறிய தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிலேயே காணப்பட்டது. எனினும் பின்னர் இலத்திரனியல் தகவல் பரிமாற்றம் (E- information exchange)அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இலத்திரனியல் வணிகமானது நிதி மாற்றங்களிலிருந்து ஏனைய வகையான பரிமாற்ற முறைவழியாக்கத்துக்கு விரிபுபடுத்தப்பட்டது. இத்துடன் நிதி நிறுவனங்களுக்கு மேலதிகமாக உற்பத்தியாளர்கள், சில்லறை வியாபாரிகள், சேவை வழங்குநர்கள், ஏனைய நிறுவனங்கள் போன்றன பங்கு கொள்ளும் அளவுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது.

இலத்திரனியல் வணிகத்தின் அறிமுகத்தின் பின்னர் இதுவரையில் சந்தைப்படுத்தலில் (Marketing) முக்கிய பங்கு வகித்த சந்தைப்படுத்தல்அடிப்படைக் கருத்துக்களை இடம் (Place), மாற்றூடகம் (Exchange) போன்றன அவசியமற்றதாக்கப்படுகின்றன. அதாவது, கொள்வனவாளன், விற்பனையாளன் நேருக்குநேர் சந்திக்க வேண்டியதில்லை. அத்துடன் பணம் போன்ற பரிமாற்றல் ஊடகமும் தேவையற்றதாகின்றது.

ஆனால், பொருட்கள் - சேவைகளின் உரிமம் மட்டும் சிறந்த முறையில் நபர்களுக்கிடையே, அல்லது குழுக்கழுக்கிடையே மாற்றம் செய்யப்படுகின்றது. இலத்திரனியல் வர்த்தகத்தில் பரிமாற்றங்களைக் கையாள்பவர்கள், வாங்குனர்கள், வழங்குநர்கள், தரகர்கள் போன்ற முதன்மையான பங்குபற்றுநர்கள் இருப்பதுடன் அவர்கள் பல்வேறு பட்டதிசையில் வசிப்பவர்களாகவும் ஒருவரையொருவர் மிகவும் அரிதாகவே தெரிந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

வணிக உலகில் இலத்திரனியல் வணிகத்தின் மூலம் போட்டி நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், இடைத் தரகர்கள் போன்றோர்கள் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். நிறுவனமொன்று இலத்திரனியல் வணிகத்தினூடாக பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

❖ வணிகம் சார் தகவல்களை உலகம் முழுவதும் பரப்பிக் கொள்ள முடிகிறது. இதனால் ஓர் நிறுவனமானது பூகோள எல்லைகளைத் தாண்டி, சர்வதேச ரீதியில் பல மில்லியன் வாடிக்கையாளர்களைத் கவர்ந்திழுக்க முடிகிறது. இதற்கு இணையத்தினூடாக வணிகம் வழிசமைக்கிறது.

❖ நிறுவனமொன்று தனது வணிக நடவடிக்கைகளுக்கு உள்ளூர்ச் சந்தைகளில் மட்டும் தங்கியிராது சர்வதேச சந்தைகளுக்குள்ளும் நுழைய வாய்ப்பளிக்கின்றது. அத்துடன் சர்வதேச ரீதியில் தொழிற்பங்காளர்களையும் ஒன்றிணைத்து வணிக செயற்பாடுகளை விஸ்தரிக்கமுடிகிறது.

❖ வணிகச் செயற்பாட்டில் - காகித அடிப்படையிலான தகவல்களைச் சேகரித்தல், நிரற்படுத்துதல், களஞ்சியப்படுத்துதல், தேவைக் கேற்பமீட்டல் போன்ற செயற்பாடுகளைக் குறைப்பதுடன் அவை சம்மந்தமான செலவுகளையும் இழிவுபடுத்தியுள்ளது.

இலத்திரனியல் வணிகமானது - வணிக செய்முறை மீளப் பொறி முறையமைத்தல் முயற்சிக்கு ஆதரவு அளித்து அவற்றில் மாற்றங்கள் நிகழ்கின்ற போது விற்பனையாளர்கள், அறிவுசார் தொழிலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் உற்பத்தித் திறன் அதிகரிக்க வழிவகுக்கின்றது.

நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களின் தேவைகள், விருப்பங்கள் என்பனவற்றை விரைவாக-செம்மையாகநிறைவுசெய்து கொள்ள முடிகிறது.

தகவல் - தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அதன் பயன்பாட்டினால் நிறுவனங்கள் வணிக செயற்பாட்டில் எவ்வாறு வெற்றி கொள்கின்றது என்பதனை தொடரில் பார்த்தோம். உண்மையில் உலக தொழில்நுட்பத்துடன் ஒப்பிடும் போது எமது நாட்டுத் தொழில்நுட்பம் மிகவும் பின்தங்கிய நிலை யிலிருப்பதைக் காணமுடிகின்றது.

அதிலும் தமிழர் பிரதேசங்களில் இதன் பிரயோகம் சொற்பமாகவே காணப்படுகின்றது. தொழில்நுட்பத்தின் அடிப்படைகளான தொலைபேசி, கணினிகள் என்பனவற்றின் பயன்பாடுகள் கூட இல்லாமல் எத்தனையோ பிரதேசங்கள் காணப்படுகின்றன. எனினும் பெருமைப்படக்கூடிய விடயமென்னவெனில் புதிய புதிய தொழில் நுட்பங்களை வழிகாட்டலன்றி திறமையாக அவற்றைப் பின்பற்றி கையாளும் வல்லமையைத் தமிழர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பது. இதனால் தான் கணினி மென்பொருள் உற்பத்தியில் சர்வதேச ரீதியில் முன்னணி வகிக்கும் மைக்ரோ சொவ்ட் (Micro soft) நிறுவனத்தில் அதிகமான இந்தியத் தமிழர்கள் பணியிலமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இன்று சாதாரண சில்லறை வியாபாரங்களிலிருந்து பெரிய கம்பனிகள் வரை அவற்றின் நடவடிக்கைகள் யாவும் கணினிமயப்படுத்தப்பட்டுதொடர்பாடல் சாதனங்களின் பயன்பாட்டுடன் மிகவும் இலகுவானதாகவும், வினைத்திறனாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைவிட வணிகத்தகவல்கள், ஆலோசனைகள் வழங்குவதற்கென பிரேத்தியேக நிலையங்களும் காணப்படுகின்றன.

ஆனால், தமிழர் பிரதேச்ங்களை எடுத்து நோக்குகின்ற போது இவற்றுக்கான தேவைப் பாடுகள் அதிகமாகக் காணப்படுகின்ற போதும் அவற்றை ஈடு செய்வதற்கான வசதிகள் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன. எனினும், இருக்கின்ற வளங்களைக் கொண்டு வணிகத் தகவல் - தொடர்பாடல் மையம்(Centre for business Information and communication) ஒன்று நிறுவுதல் வர்த்தக சமூகத்துக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

த. ஜெகதீஸ்வரன்
முகாமைத்துவ கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# ஆங்கிலமொழி கற்கையை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்!





கிளிநொச்சி—

கிளிநொச்சி ஆங்கில மொழிக் கல்லூரியில் கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியக கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி ஆங்கில மொழிக் கல்லூரியின் பணிப்பாளர் எஸ். நளன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார். பாராட்டுரையை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி நிகழ்த்தினார்.

கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் சான்றிதழ்களை வழங்கினார்.

தொடர்ந்து கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்கள் ஆங்கிலப் பாடல் இசைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதியுதவியுடன், தமிழீழ மாணவர் அமைப்பினரால் கிளிநொச்சியில் ஆங்கில மொழிக் கல்லூரி நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் கற்கைநெறியை நிறைவு செய்த இரண்டாவது அணியைச் சேர்ந்த 23 பேருக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவன உதவிகள்!

கிளிநொச்சி—

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் சில கிராமங்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

விவசாய நடவடிக்கையை மேம்படுத்தவும், உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் பிரதேச செயற்பாடுகள், கிராம சேவகர் பிரிவு, கமக்கார அமைப்புகள் ஊடாக பல உதவிகளை இந்த நிறுவனம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வறிய மக்களுக்கு உணவுப் பொருட்கள், விவசாயிகளுக்கு விதைநெல், வடிகால், வீதிகள் புனரமைப்பு என்பனவற்றோடு நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

# கண் சத்திரசிகிச்சைக்கு நிதியுதவி கோரும் சிறுவன்

கிளிநொச்சி—

விளையாடிக்கொண்டிருந்த போது தடி கண்ணில் தாக்கியதால், இடது கண்பார்வை இழந்த சிறுவனுக்கு அவசர சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

நாலாம் வாய்க்கால் மருதநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த அருளம்பலம் நிரோஜன் வயது - 5 என்ற சிறுவனே இடதுகண் பார்வையை இழந்துள்ளார்.

இடதுகண் பார்வையின்மையால் மற்றும் வலது கண் இரவில் தெரியாத இந்தச் சிறுவனின் கண் சத்திரசிகிச்சைக்கு இரண்டு லட்சம் ரூபா உடனடியாகத் தேவைப்படுகிறது.

இந்தச் சிறுவனின் கண் சத்திரசிகிச்சைக்கான நிதியைத் திரட்டும் பணியில் கிளிநொச்சி மாவட்ட மாற்றீ டான வலுவுள்ளோர் சங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சிறுவனின் கண் சத்திரசிகிச்சைக்கு உதவி செய்யக் கூடியோர் கிளிநொச்சி மாவட்ட மாற்றீடான வலுவுள்ளோர் சங்கத் தொலைபேசி இலக்கமான - 021 2285784 உடன் தொடர்ப்பு கொள்ளலாம்.

# அபாய ஒலி எழுப்பும் கருவிகள் மன்னார் ஆயரிடம் கையளிப்பு!

மன்னார்—

சுனாமி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பதற்காக அபாய ஒலி எழுப்பும் 15 கருவிகளை - ஜேர்மன் நிறுவனம் நேற்றுமுன்தினம் மன்னார் ஆயரிடம் கையளித்தது.

மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜேர்மன் நிறுவனத்தின் இலங்கைக்கான திட்ட அதிகாரி ஈட்பாயூட் லிங்கா, மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகையிடம் கையளித்தார்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் டொக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன மேற்கொண்டிருந்தார். இவரது தலைமையிலேயே இந்தக்குழு மன்னாருக்கு வந்து கருவிகளைக் கையளித்தது.

தலா 40 ஆயிரம் பெறுமதியான இந்த அபாய ஒலிக் கருவிகள் 300 இலங்கைக்கு வழங்கப்பட இருப்பதாகவும், இதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்துக்கு 40 கருவிகளும், மாத்தறை மாவட்டத்துக்கு 35 கருவிகளும், மன்னார் மறை மாவட்டத்துக்கு 15 கருவிகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மோ)

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து அச்சம் காரணமாக மக்கள் இடப்பெயர்வு!

கிளிநொச்சி—

வட-கிழக்கு பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்செயல்களினால், மன்னாரிலும் மக்கள் மத்தியில் தொடர்ந்து அச்ச நிலை நிலவி வருகிறது.

இதனால் மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கும் மக்கள் சிலர் வன்னிக்கும், தென் பகுதிக்கும் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பாரிய அசம்பாவிதங்களும், வட - கிழக்குப் பகுதியில் தொடர்ந்து நிலவிவரும் வன்செயல் சம்பவங்களும், இந்தப் பகுதி மக்களை தொடர்ந்தும் அச்சத்துக்குள்ளாக்கி வருவதால், பாதுகாப்பு கருதி வன்னிப் பிரதேசம், மற்றும் தென்பகுதிக்கு இடம்பெயர்ந்து வருவதாக அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

1999 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மன்னார், பேசாலை அகதி முகாமில் தங்கியிருந்த முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 186 குடும்பங்கள் மன்னார் மாவட்டத்தில் தங்குவதற்கு நிரந்தர காணி இல்லையெனத் தெரிவித்து வந்த போதிலும், இந்தப் பகுதியில் தற்போது நிலவிவரும் பதற்ற நிலையால் தங்கள் சொந்த மாவட்டமான வன்னிப் பிரதேசத்திற்கு செல்வதற்கு மன்னார் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக மன்னார் பிரதேசசெயலர் தெரிவிக்கையில் -

வன்னிப் பிரதேசத்துக்கு ஒரு சில மக்கள் செல்ல விருப்பம் தெரிவித்திருக்கின்றபோதும், அங்குள்ள அரச அதிபர்களுடன் தொடர்பு கொண்ட பின்னரே இவர்களை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, தலைமன்னார்-பியரில் நீண்ட நாட்களாகத் தங்கியிருந்து, கடற்தொழிலில் ஈடுபட்டு வந்த தென்பகுதி கடற்தொழிலாளர்களும், கற்பிட்டியிலிருந்து இந்தப் பகுதிக்கு மீள் குடியேறி கடற்தொழிலில் ஈடுபட்டுவந்த தலைமன்னார் - பியர் கடற்தொழில் குடும்பங்களும் மீண்டும் கற்பிட்டி நோக்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர்கள், கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு பாஸ் முறையை கையாளுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும்-

இது தொடர்பாக அரச அதிபர் பாதுகாப்பு அதிகாரிகளுடனான மாநாடு ஒன்று இந்த வாரம் நடைபெறவுள்ளதாகவும் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# வீடுகளை அமைக்கும் பணி மாமுனையில் மீள ஆரம்பம்!

வடமராட்சி கிழக்கு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் 21 குடும்பங்களுக்கு சேவா லங்கா நிறுவனத்தால் தற்காலிக வீடுகள் அமைக்கும் பணி தற்போது இடம்பெற்று வருகிறது.

இந்தப் பகுதி மக்களுக்கான வீடுகள் அமைத்து தரப்படும் என, ஏற்கனவே வாக்குறுதியளித்து - ஒரு வருடத்தின் பின் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நிரந்தர வீடுகள் அமைப்பதாக பொறுப்பெடுத்துள்ள அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கம் இந்தப் பகுதியில் மந்த கதியில் தனது பணிகளை நகர்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு வருடம் கடந்தும், ஒரு நிரந்தர வீட்டைக்கூட இந்த நிறுவனம் அமைத்துக் கொடுக்கவில்லை. இந்த விடயத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையும், வடமராட்சிப் பிரிவும் இணைந்து அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கூடிய அழுத்தம் கொடுக்கவேண்டும் என இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட வரமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதி மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துத் தருவதாக சேவா லங்கா நிறுவனம் உறுதியளித்து ஒருவருடம் கடந்து எந்தப் பணியும் இடம்பெறாத நிலையில் தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிறமூட்டிகளைப் பயன்படுத்த சுகாதார சேவை தடைவிதிப்பு

கிளிநொச்சி—

உணவுத்தேவைக்கு உடல் நலபாதிப்பை ஏற்படுத்தும் அங்கீகரிக்கப் படாத நிறமூட்டிகளைப் பாவிப்பதைக் குறைத்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - தாயகப்பகுதியெங்கும் உணவுத் தேவைகளுக்கப் பயன்படுத்தப்படும் உடல் நலத்துக்கத் தீங்கு விளைவிக்கக்கூடிய நிறமூட்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிறமூட்டிகள் உணவுத் தயாரிப்புச் செயற்பாடுகளாக- நிறமூட்டப்பட்ட சுவையூட்டிகள், சர்பத், மென்பான உற்பத்தி, பற்பொடி, இனிப்பு வகைகள், ஐஸ்கிறீம் உற்பத்திகள் ஆகியவற்றுக்குப் பயன்படுவதை அவதானிக்க முடிகிறது.

உணவுத் தேவைக்கு அங்கீகரிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய நிறமூட்டிகள் பாவிப்பதனாலும், அதிகளவான உணவு நிறமூட்டிகள் பாவிப்பதனாலும் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிப்பதை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே உணவுத் தேவைக்கென அங்கீகரிக்கப்படாத நிறமூட்டிகள் உணவுத் தேவைக்குப் பயன்படுத்தப்படுவது தடைசெய்யப்படுகிறது.

# 'காசீம்' சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் ஒளிவிழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும்!





கிளிநொச்சி—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் அக்கராயன்அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஆனைவிழுந்தான் காசீம் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த ஒளிவிழாவும், பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் காசீம் பகல் பராமரிப்பு நிலையத்தின் நிர்வாக இயக்குநர் ம.புஸ்பலதா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றப்பட்டதை தொடர்ந்து, ஆசியுரையை ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் மேரி அனந்தசுகந்தினி நிகழ்த்தினார். வாழ்த்துரையை அக்கராயன் முன்பள்ளிகளின் மேற்பார்வையாளர் தி.சாந்தகுமாரி, கிராம மக்கள் சார்பாக சின்னத்தம்பி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை ஆனைவிழுந்தான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் நவீனமலர், அக்கராயன் பிரதேச அபிவிருத்தி நிறுவன உதவிப்பணிப்பாளர் கோ.நல்லையா ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து சிறுவர்களின் கலை நிகழ்வுளும், சிறுவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் போசாக்கு நிலைய இணைப்பாளர், பணிப்பாளர், ஆர்.ஆர்.டி.ஓ இணைப்பாளர்கள், தொண்டர்கள், பெற்றோர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# கண்காட்சி!

கிளிநொச்சி—

கேணல் கிட்டு நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் பன்னவேலை உற்பத்திப் பொருள் கண்காட்சி - எதிர்வரும் திங்கட் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

திருக்குறள்

## நமது நோக்கு

# மீண்டும் செம்மணிகள்?

யாழ். குடாநாட்டில் காணாமற்போவோர், கடத்தப்படுவோர், சுட்டுக் கொல்லப்படுவோர், காயப்படுத்தப்படுவோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதாவோர் அல்லது மர்மமான முறையில் காணாமற்போ வோர் எங்கே கொண்டு செல்லப்படுகின்றனர், எங்கே தடுத்து வைக்கப்படுகின்றனர் என்பது மர்மமாகவே உள்ளது.

கடந்த மாதத்தில் மட்டும் முப்பதுக்கும் அதிகமானவர்கள் யாழ்.குடாநாட்டில் காணாமற்போயிருப்பதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது மட்டுமின்றி இப்போது ஒவ்வொரு நாளும் காணாமல் போனவர்கள் தொடர்பாகவும், கடத்தப்பட்டவர்கள் தொடர்பாகவும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அவசர காலச்சட்டத்தின் பெயரால் அரச படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் காரணமாகவே இத்தகைய சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. போர்நிறுத்த உடன்பாடும் - அவசரகாலச் சட்டமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக இருந்தபோதும் -

அரசாங்கம் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்து வருகிறது. அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு அரசபடையினர் கண்மூடித்தனமாக நடந்து கொள்வதால், நிலைமை நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகிறது.

சந்தேகத்தின் பேரில் எவரையாவது கைதுசெய்வதாயினும் அதற்கான உரிய நடைமுறைகளை பின்பற்றவேண்டும். பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ அதுபற்றித் தெரியப்படுத்தாமல் தொடர்ந்து மறைத்து வைத்திருப்பதானது - மீண்டுமொரு இருண்ட யுகத்துக்கு வழிகோலுவதாகவே அமையும்.

1996 ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு அரச படைகளின் ஆதிக்கத்துக்குள் வந்த பின்னர் காணாமற்போனவர்களின் எண்ணிக்கை பல நூறாகும். இவர்களில் எத்தனையோ பேர் செம்மணிப் பகுதியில் கொன்று புதைக்கப்பட்டனர்.

மேலும், எங்கெங்கோ எல்லாம் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட இவர்கள் இன்னமும் காணாமற்போனவர்களாகவே இருந்துகொண்டிருக்கின்றனர்.

சட்ட ரீதியாக ஒருவரைக் கைதுசெய்து அவரை நீதியின் முன் நிறுத்துவதற்கு அப்பால் - அரச படைகள் தாம் நினைத்தபடியே நடந்துகொள்வதுதான் இத்தகைய நிலைமைக்குக் காரணமாகும்.

1996 - 2002 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற கைதுகள், காணாமற்போதல்கள் எல்லாவற்றையும் ஒரு யுத்தகால நடவடிக்கையென்று எடுத்துக்கொண்டால் கூட - இப்போது யுத்தநிறுத்தம் நிலவும் சூழலில் இப்படியான சம்பவங்கள் நிகழ்வது அனுமதிக்கப்பட முடியாததாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவை மக்கள் மதிக்கின்ற அளவுக்கு அரசாங்கமோ, அரச படைகளோ கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

இதனால், காணாமற்போனோர் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்கமுடியாத நிலை காணப்படுகிறது. கடந்த ஒரு மாத காலத்தில் காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.


அவர்கள்மீது எந்தக் குற்றச் சாட்டும் சுமத்த முடியாமல், நீதிமன்றங்களில் நிறுத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, படைகளுக்கு கூடிய அதிகாரங்களைக் கொடுத்திருப்பதால் இத்தகைய சம்பவங்களுக்கு ஊக்கம் கிடைத்திருக்கிறது.

இந்த ஊக்க சக்தியின் உச்சக்கட்ட வெளிப்பாடாக குடாநாட்டு காணாமற்போவோரின் பட்டியல் நீண்டு செல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கைதுகள், காணாமற்போதல்களைத் தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை உரிய தரப்பினர் எடுக்கத் தவறினால் மேலும் செம்மணிகள் முளைகொள்ளும் நிலை ஏற்படும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# இனியும் சர்வதேசம் அங்கீகரிக்காவிட்டால் மண்காக்க மக்கள் படையணி போரிடும்!

## சம்பூரில் எழுச்சிப் பிரகடனம்

திருகோணமலை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இனிமேலும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்காவிடின் - தேசியத் தலைவரின் ஆணையை ஏற்று மக்கள் படையணி போராடும் என திருகோணமலை சம்பூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் வெளியிடப்பட்ட எழுச்சிப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய எழுச்சிப்பிரகடனத்தை பிரகடனப் படையணிப் பொறுப்பாளர் பிரபாகரன் வெளியிட்டார்.

இந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனியும் யோசிக்க என்ன இருக்கின்றது. ஒன்றும் இல்லை. ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டியதுதான். அதுதான் சாவுக்குள் வாழ்வை அமைப்பதென்பது.

சாவென்பது எமக்கு வீரச்சாவாக அமைய வேண்டும். வீழ்ந்தவர் நினைவுடன் வீறாக எழுந்து எமது மக்களின் வாழ்வுக்காக எமது மண்ணையும், எமது இருப்பையும் காப்போம். எத்தனை வருடங்கள் ஏமாற்றப்படுவது?

50 வருடங்களுக்கு மேலான போராட்டங்களும் விழலுக்கு இறைத்த நீராகிவிடலாமா? பம்மாத்து நாடாளுமன்றத்தில் சாத்வீக போராட்டங்கள் சாதித்தது என்ன? உயிர்களையும், உடமைகளையும், உறவுகளையும் இழந்ததுதான். திட்டமிட்ட இன அழிப்பிலே இலங்கை உச்சக்கட்டத்தில் நின்றதனை நாம் கண்டோம்.

குட்டக் குட்டக் குனியும் மடையர்கள் என நினைத்தவர்களை தட்டிக்கேட்டது எமது புதல்வர்களது கரங்களில் ஏந்திய ஆயுதங்கள். பட்டொழிந்து போவதை விட தட்டிக்கேட்டு வெட்டிச் சரித்து சரித்திரம் படைத்த போதுதான் தட்டிக்கழிக்க முடியாது சமரசம் பேச வந்தான் எதிரி.

சர்வதேசமும் உற்றுப்பார்த்து உணர்ந்து கொண்டதால் விட்டுக் கொடுப்புச் சமாதான தேவையுடன் சரியென வந்தனர் எமது வீரப் புதல்வர்கள். ஆனால், திட்டமிட்ட சதிகளுடன் எம் எதிரிகள் திசை மாறிச்சென்று விட்டனர்.

சமாதானத்தை உச்சரித்துக்கொண்டு இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளிலும், மனித உரிமை மீறல்களிலும், யுத்தநிறுத்த மீறல்களிலும் தனது இராணுவத்தை ஈடுபடுத்திக் கொண்டும், சர்வதேசத்தை ஏமாற்றிக்கொண்டும் இருக்கின்றார்கள்.

சர்வதேசம் எங்கும் எம் வீரப்புதல்வர்களின் பலம் உணர்ந்து கொள்ளப்பட்ட நிலையில், வெறிபிடித்த இராணுவத்தினதும் அரசினதும் பேரினவாத வெறி பெரிதாகி தொடரவே செய்கிறது.

அரிய தியாகத்தால் எமது மண் அகிலம் வியக்கத்தக்க வகையில் தலை நிமிர்ந்துள்ளது. எமது படை சகல மக்களின் வாழ்வுக்காக, சமாதானத்துக்காக தலைசாய்த்து நிற்கிறது. எமது வீரப்போரின் கரங்களாகிய மக்கள், தாம் எதிர்பார்த்தது பொய்த்து விடக்கூடாது என்ற நினைப்புடன் எமக்காய் தியாகத் தீயில் உயிரிழந்த எம் புதல்வர்களின் கனவுகள் சமாதான சதிவலையில் சிக்கிச் சாவதை இன்னும் அனுமதிப்பதா? என்று குமுறிக்கொண்டிருக்கின்றனர்.

எமது வீர வரலாறும், போர்க்கள வீச்சும் அகிலம் அறியும்.

அந்த அர்ப்பணிப்புகள் கற்பனைக்கதையல்ல, நாம் பெற்றெடுத்த வீரப்புதல்வர்களின் உன்னதப்போரும், உலகம் வியக்கும் அரசியல் போக்கும் அறிந்த நாம் - இனியும் பேரினவாதிகளுடன் பேரம் பேசுவதா?

போர் தவிர்த்து சமாதானம் பேசுவது வீண் என்று விளங்கவில்லையா?

தமிழீழத் தமிழர் நாம் விடுதலைப் புலிகள் என யார் அறிவார்? தமிழ் மக்கள் அனைவரும் புலிகளே. தமிழீழத் தமிழர்களின் உலகப் பெயர் தமிழீழ விடுதலைப் புலிகளே.

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன். இன்று நாம் அவர் ஆணைக்காகக் காத்திருக்கும் நிலை. பொறுமைக்கும் எல்லையுண்டு. காத்திருக்கிறோம் தலைவரின் சொல்லுக்காக.

இனியும் சர்வதேசத்துக்கு மதிப்பளித்து நாம் உயர்வானவர்கள் என்பதை,எமது பிரச்சினையில் ஈடுபட்டு நீதியான தீர்வினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது அவர்களின் மனிதாபிதமான கடமை.

அதில் சர்வதேசம் தவறும் நிலையில், நாம் எதுவித அச்சமும் இன்றி எமது தலைவனின் பின்னால் அணிதிரள்வோம்.

மக்கள் படையணி போரிடும் போதிலே எமது இருப்பையும், வாழ்வையும் எமது வாழ்வுக்கான மண்ணையும் காப்போம்.

இருப்பினும் இழப்போ, இறப்போ என்ன யோசிக்க இருக்கிறது. ஒன்றுமே இல்லை. ஒரு முடிவுதான் இறுதி முடிவு. அதுதான் மக்கள் படையணி.

புலிப்படை மண் காக்கும், மானம் காக்கும், வாழ்வு அமைக்கும், தமிழீழம் காணும், தரணி எங்கும் போற்றும்.

சர்வதேசமே! சர்வதேச மக்களே! இலங்கை அரசே! யுத்தமின்றி சாத்வீக முறையில் கௌரவமான தீர்வுக்கே இன்று வரை இந்த நிமிடம் வரை காத்திருக்கிறோம்.

எமது உள்ளத் துடிப்பையும், உணர்வையும் புரிந்துகொண்டு எமக்குரிய தீர்வினைத் தரத் தவறினால், தமிழ் மக்களாகிய நாங்கள் எமது தேசியத்தலைவனின் வழியிலே - வழிகாட்டலில் எமது தீர்வினைப் பெற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டோமென உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

மரபு வழித்தாயகம், தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, எமது இறையாண்மைக்கான போராட்டம் என்பவற்றின் அடிப்படையில் எம்மையும், எமது போராட்டத்தையும் அங்கீகரிக்குமாறு சமாதானத்தை விரும்புகின்ற அனைத்து சர்வதேசத்தையும், சர்வதேச நாடுகளையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதன் பின்பும் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளவில்லையெனில் தலைவன் கூறியது போல் தரப்பட்ட கால அவகாசம் முடிவடைகிறது. எனவே, விடுதலைப் போரை எங்கள் காவலன் சுட்டும் காலத்தில் நாமும் இணைந்து முன்னெடுக்கத் தயார். எங்களை வாழவிடுங்கள், இல்லையேல் எமது வழியில் விடுங்கள் என்று அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் பட்டியல்களில் பெயர்களை இணைக்கவும்!

கொழும்பு

எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் வாக்காளர் பட்டியல்களில் தமது பெயர்களை இணைத்துக் கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்ற துணைத்தலைவர் மனோகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி வரையான 6 மாத காலத்துக்கு மேலாக ஒரு இடத்தில் பதிவு பெற்றிருந்தால், அல்லது வாடகை வீட்டில் குடியிருந்தால் 15 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் இந்த வாக்காளர் பட்டியலில் தம்மை இணைத்துக் கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை- மலையக வாக்காளர்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டு ள்ளது.

மாணவர்களின் பாடசாலை அனுமதி, அரசியல் நலன் மற்றும் ஏனைய விடயங்களுக்காக வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களை உள்ளடக்கியிருக்க வேண்டியது அவசியம் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு பிரதம தபாலகத்துக்கு நிரந்தர தபாலதிபர் நியமனம்!

நெடுந்தீவு

நெடுந்தீவு பிரதேச பிரதம தபாலகத்துக்கு நெடுந்தீவு மேற்கில் இதுவரை காலமும் உபதபாலதிபராகப் பணியாற்றிய கோ.யோகேஸ்வரன் கடந்த முதலாம்திகதி முதல் பிரதம தபாலதிபராக நியமிக்கப்பட்டுள்ளாதால் நெடுந்தீவு பிரதேச மக்கள் தொடர் தபாலை சேவையைப் பெறக்கூடிய நிலையில் உள்ளனர்.

கடந்த காலங்களில் ஆறுமாத காலத்துக்கு ஒரு தபாலதிபர் என வெளியிடங்களில் இருந்து நியமிக்கப்பட்டு வந்தமையால் நெடுந்தீவு பிரதேச மக்களது தபால் சேவைகளில் இடையிடையே தடங்கல்கள் ஏற்பட்டுவந்தது. தற்போது நெடுந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே தபாலதிபராக நியமிக்கப்பட்டுள்ளமையால் இந்நிலைமை சீராக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெடுந்தீவு மேற்கு உபதபாலகத்துக்கான உபதபாலதிபராக சோ.நளாயினி நியமிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# மகிந்தவின் இந்தியப் பயணம் கொடுத்த வெற்றி

இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை என்பது பலரது கருத்தாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில்



வெற்றி பெற்றதும் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிடமிருந்து பலகோணங்களில் உதவிகளைப் பெற்றுவிடலாம் என்று நம்பியிருந்தார். ஜே.வி.பி, ஹெல உறுமய ஆகியவற்றுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, ஒற்றையாட்சிக்குள் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த ஜனாதிபதி -தமிழர் தாயகம் என்ற தமிழ் பேசும் மக்களின் அடிப்படைத் தத்துவத்தையே நிராகரித்திருந்தார். அதேபோன்றே சுயநிர்ணய உரிமையையும் நிராகரித்திருந்தார்.

தனது வெற்றிக்காக இதர கட்சிகளுடன் ஒப்பந்தங்களைத் தனது கட்சியின் சம்மதமின்றிச் செய்தவர். தேர்தல் மேடைகளில் பேசியவற்றை விட்டுவிட்டுத் தான் ஜனாதிபதி என்ற நிலையில் குறுகிய கட்சி அரசியல் இனவாதக் கருத்துக்களுக்கு அப்பால் சென்று நடப்பார் எனச் சிலர் எதிர்பார்த்தனர். ஆனால் தேர்தல் வெற்றி அறிவிக்கப்பட்டவுடன் நாட்டுமக்களுக்கு ஆற்றிய முதல் உரையிலும், நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை வெளியீட்டு உரையிலும் மகிந்த சிங்கள, பௌத்தர்களின் தலைவனாகவே உரையாற்றியிருந்தார்.

இலங்கைத் தீவிலே புரையோடிப் போயிருக்கும் தமிழ் - சிங்கள முரண்பாடுகளை வெறுமனே வடக்கு - கிழக்குப் பிரச்சினை என்றும், பயங்கரவாதப் பிரச்சினை என்றும் உலகத்துக்குக் காட்டுவதிலேயே அவர் அதிக அக்கறை காட்டினார். இந்த நோக்கத்திலேயே தனது வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவை உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பினார். இந்தியாவை உள்ளீர்த்து நோர்வேயைப் புறந்தள்ளி, தான் விரும்பும் தீர்வை இந்தியாவின் உதவியோடு தமிழ் மக்கள் மேல் திணிக்கலாம் என்பதே அவரது நோக்கமாக இருந்தது.

வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இந்தியா சென்றார். இந்தியக் குடியரசுத் தலைவர் டொக்டர் அப்துல்கலாமைச் சந்தித்தார். இலங்கை ஜனாதிபதிக்கான இந்தியப் பயணத்துக்கான சம்பிரதாய பூர்வமான அழைப்பைப் பெற்றார். இந்தியப் பிரதமர், வெளியுறவு அமைச்சர், சோனியாகாந்தி என்போரையும் மங்கள சமரவீர சந்தித்துப் பேசினார். நோர்வேயை ஒதுக்கிவிடும் இலங்கையின் எண்ணம் ஈடேற வில்லை. இந்தியா அல்லாது விட்டால் வேறு ஆசிய நாட்டை அனுசரணைக்குப் பயன்படுத்தலாம். அது ஜப்பானாக இருக்கலாம் என்று எண்ணிய இலங்கைக்கு, இந்தியா சாதகமாக இருக்கவில்லை. நோர்வேயின் அனுசரணையைத் தொடருமாறு இந்தியா கோடி காட்டியிருந்தது. மங்கள சமரவீர நாடுதிரும்பினார்.

இந்த நிலையிலேதான் இலங்கை படைகள் தமிழர் தாயகத்தில் கெடுபிடிப்போரை விரிவுபடுத்தியது. இதில் புங்குடுதீவில் இளம்பெண் தர்ஷினி மீதான கடற்படையினரின் பாலியல் வெறியாட்டமும், மிருகத்தனமான கொலையும் யாழ்ப்பாணத்தில் சமாதான ஒப்பந்தத்தைக் கேள்விக்குறியாக்கியதுடன் யுத்த விளிம்புக்குள் தீவு முழுமையும் தள்ளப்பட்டது.

பொங்கி எழும் மக்கள்படை இலங்கை இராணுவத்தினரின் படைநடவடிக்கைகளுக்குப் பதில் கொடுக்கத் தொடங்கியது. அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்து காணாமற்போதல், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழத்தல், இவ்வாறு உயிரிழந்ததவர்கள் விடுதலைப்புலிப் போராளிகள் என்று அறிவிக்கப் படுதல் என்று யுத்தநிறுத்த மீறல்கள் அதிகளவில் இடம்பெறலாயின.

இதன் உச்சக்கட்டமாகவே மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் நள்ளிரவு நத்தார் ஆராதனையின் பொழுது தேவாலயத்தினுள்ளே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். மிகுந்த பாதுகாப்பான எல்லைப் பகுதிக்குள் இந்தப் படுகொலை நடத்தப்பட்டது.

இவ்வாறு இலங்கை இராணுவத்தினதும், ஒட்டு ஆயுதக் குழுக்களினதும் அடாவடித்தனங்கள் அதிகரித்த நிலையிலேயே, ஜனாதிபதி மகிந்த இந்தியாவுக்கான தனது பயணத்தைத் தொடங்கினார். புலிகள் ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் என்று கூறிவரும், இலங்கை அரசு ஜனநாயக வழியில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்தை தேவாலயத்தில் வைத்துப் படுகொலை செய்துவிட்டு ஜனநாயகம் பற்றியும், பயங்கரவாதம் பற்றியும் பேச இந்தியாவுக்குச் சென்றார் ஜனாதிபதி.

இந்தியா இங்குள்ள பிரச்சினையில் நேரடியாக மூக்கை நுழைக்க விரும்பவில்லை என்பதையும், வேறு ஆசியநாடு எதுவும் அப்பங்கை வகிப்பதையும் விரும்பவில்லை என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டிய நிலையிலிருந்து மாறவில்லை. நோர்வேயின் அனுசரணைப் பணியைத் தொடரும்படியே வலியுறுத்தியிருந்தது.

வலுவான பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்யலாம் என்று நினைத்த மகிந்தவின் நோக்கமும் நிறைவேற முடியாமற் போய்விட்டது. அத்தோடு இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் இணைத் தலைமைக்குள் இந்தியாவையும் இணைக்கும் திட்டமும் எடுபடவில்லை. அதனால் தான் இலங்கையின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்குமான தனது பயணம் வெற்றி என்று கூறி, தான் உண்மையில் அவசரமாக இந்தியாவுக்குச் சென்ற நோக்கத்தை மறைக்கப் பார்க்கிறார்.

இந்திய முதலீட்டாளர்கள் பலரையும், அபிவிருத்தி சார்ந்த அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியதன் பலன்- இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாரிய உதவியாக அமைந்துள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால் சமாதானம் இல்லாத இடத்தில், அதுவும் யுத்தமேகங்கள் கருக்கட்டிய நிலையில் முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்வார்களா என்பது கேள்விக்குரியதே.

முதலில் ஜனாதிபதி தன்னுடன் ஆறுமுகன் தொண்டமான், மகேஸ்வரன் ஆகியோரையும் அழைத்துச் செல்லவே முற்பட்டார். ஆனால் இவர்கள் அவருடன் செல்வதைத் தவிர்த்துக் கொண்டமையும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். இவ்விருவருடனும் பேரியல் அஷ்ரப்பையும் கூட்டி வந்துள்ளேன். அனைத்துத் தமிழர் தரப்பும் என்னுடன் வந்துள்ளது என்று காட்ட அவர் எடுத்த முதல் முயற்சியே கோணலாகி விட்டது. முதற்கோணல் முற்றும் கோணல் என்பது போல மகிந்தவின் இந்தியப் பயணம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாமல் சிதிலமடைந்துள்ளது என்பதே யதார்த்தமாகும்.

இவற்றுக்கு மாறுபாடாகத் தமிழ் நாட்டில் இதுவரை மேக மூட்டத்தில் மறைந்திருந்த உணர்வுகள் வெளியே புலப்படத் தொடங்கியுள்ளன. பல்வேறு சக்திகள் தமிழ் நாட்டு மக்களையும், தமிழீழ மக்களையும் பிரித்து வைப்பதில் கடந்த சில ஆண்டுகளாக முயற்சி செய்துவந்தன. 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, 1958 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பேரினவாத வன்செயலில் இருந்து 1983 ஆம் ஆண்டில் நடந்த தமிழ் மக்கள் மீதான வன்செயல்வரை அண்ணன் - தம்பி உறவுடன் உணர்வுகளுக்குள் ஒன்றாக இருந்த தமிழக மக்களையும், தமிழீழ மக்களையும் பிரிப்பதற்கு சதி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.



1991 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்வை வைத்து - தமிழீழ மக்களின் மேல் ஒரு வெறுப்பைத் தமிழக மக்களிடையே ஏற்படுத்தியிருந்தனர். அப்பொழுது முன்னணி இந்தியச் செய்தித்தாள் ஒன்று எழுதியிருந்ததை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாகும்.

"ரஜீவ் காந்தியின் சாவை வைத்து இலங்கைத் தீவில் வாழும் மக்களின் மேல் தமிழகத் தமிழ் மக்கள் வெறுப்படைய வைக்கப் பட்டுள்ளனர். இது எவ்வளவு காலத்துக்கு இருக்கும். காலம் செல்லச் செல்ல இதனை மறந்து விடுவார்கள். அப்பொழுது இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஏதாவது இன்னல்கள் ஏற்பட்டால் தமிழ் நாட்டு மக்கள் பொங்கி எழுவார்கள். அதற்குக் காரணம் அவர்களிடையே உள்ள மொழியும், பண்பாட்டுப் பிணைப்பும் ஆகும்" என்று அச் செய்தித்தாள் எழுதியிருந்தது. அதுதான் இன்று அங்கு புலப் பட்டுள்ளது.

சாம்பல் பூத்த நெருப்பாக இருந்த அந்த உறவும், உணர்வும் இன்று மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியால் பற்றி எரியும் நெருப்பாக மாறிவருகிறது. மகிந்த ராஜபக்ஷ தமிழ் நாட்டுக்கும் வரவுள்ளார் என்ற அறிவித்தல் கண்டதும், அதற்குக் கண்டனமும், எதிர்ப்பும் தமிழகத்திலே எழுந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. விடுதலைச் சிறுத்தைகள் அணியினர் தொல். திருமாவளவன் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்ய அறிவித்தல் கொடுத்திருந்தனர் இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் வை.கோவின் மறுமலர்ச்சித் திராவிடக்கழகமும், டொக்டர் இராமதாஸ் தலைமை யிலான பாட்டாளி மக்கள் கட்சியும் இணைந்து கி.வீரமணியின் திராவிடர் கழகத்தையும் இணைத்துக் கண்டனக் கூட்டத்தை நடத்தினர். இந்தக் கூட்டத்துக்கு கி.வீரமணி தலைமை வகித்தார்.


பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா- ஜனாதிபதி மகிந்தவைச் சந்திக்க மறுத்துவிட்டார். இதனால் மகிந்தரின் தமிழ்நாட்டுப் பயணம் கைவிடப்பட்டது. இது தமிழக- தமிழீழ உறவின் வலிமையை அனை வருக்கும் காட்டி நிற்கின்றது.

(தொடரும்...)

---

# திருவாதிரைப் பெருவிழாவின் சிறப்பு உற்சவமே ஈழத்து சிதம்பரத்தில் பஞ்சரத பவனிப் பெருவிழா

ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிவ வழிபாடு நிலவி வந்துள்ளமையை வரலாற்று ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. இதனாலேயே தான் ஈழம் சிவபூமியென திருமூலரால் போற்றப்பட்டது.



இலங்கை மன்னன் இராவணன் ஓர் சிவபக்தன். இவனைத் திருஞானசம்பந்தர் 'இராவணன் மேலது நீறு' என எடுத்து ஓதுவதில் இருந்து இராவணன் காலம் முதலாக ஈழத்தில் சைவ நெறியே போற்றப்பட்டு வந்ததென்பது உண்மை. மேலும் 'அழகமர் வண்டோதரிக்கும் பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரான்' என மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் கூறுவது இதனை மேலும் வலியுறுத்தும். மண்டோதரி இராவணனின் மனைவியாவாள். இராவணன் காலத்திலிருந்தே சிவாலயங்களும் உருப்பெற்று நிலவிவந்துள்ளன.

இதற்கோர் எடுத்துக் காட்டாக இன்றும் நிலவுவது திருகோணமலையாகும். இத்தகைய பெருமைமிக்க இலங்கையில் தொன்று தொட்டு இன்று வரை பல்வேறு சிவாலயங்கள் உருப்பெற்று வழிபடப்பெற்று வருகின்றன. இத்தகைய சிவாலயங்களிலொன்றாக ஈழத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயுள்ள காரைநகரிலே சிறந்து விளங்குவது ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவன் கோவிலாகும்.

சைவர்களுக்கு கோயில் என்றால் சிதம்பரமாகும். இந்தக் கோயிலை என்றும் நினைவு படுத்தும் வகையில் ஈழத்தில் இருக்கும் சிவத்தலம் ஈழத்துச் சிதம்பரம். இந்தத் திருத்தலம் காரைநகர் ஈசான மூலையில் பரந்த கன்ற பெருவெளியில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக விளங்குகின்றது. பக்தியும், ஆசாரமும் விளங்க அருள்பாலிக்கும் சிவப்பதியாக ஈழத்தில் இந்த ஆலயம் விளங்குகின்றது.

ஆண்டிமுனிவரின் சித்தும், அம்பலவி முருகரின் தியாகமும் இணைந்தே இந்த ஆலயம் தோற்றம் பெற்று இன்று பெருவளர்ச்சி கொண்டு விளங்குகிறது.

## ஆண்டிகேணி ஐயனார்

காரைநகர் சிவன் கோவிலின் தலவிருட்சமான அரசின் கீழ் வைரவர் வழிபாடு இடம்பெற்றது. இந்த வழிபாட்டில் ஈடுபட்டவரே ஆண்டிமுனிவர் என்னும் சித்தராவார். இவர் இராமநாதபுரத்தவரோ அல்லது யாழ். நாட்டவரோ என்பது தெரியவில்லை. இந்த நிலையில் ஓர் ஒளியானது அரசின் தென்கிழக்கு மூலையிலே தென்பட்டது. ஒளி வெளிப்பட்ட இடத்தைத் தோண்டிய போது ஐயனார் விக்கிரகம் வெளிப்பட்டது. ஆண்டி முனிவர் வைரவர் சூலத்தோடு ஐயனாரையும் சேர்த்து பூசை வழிபாடுகள் செய்து வந்தார். காலப்போக்கிலே சிவனுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஐயனார் ஓர் அற்புத மூர்த்தியாக பண்டு தொட்டு வழிபடப்படுகின்றார். அதனாலே தான் ஆண்டிகேணி ஐயனார் என்ற திருநாமமும் ஏற்பட்டது.

## ஆனந்த நடராசன்

ஈழத்து சிதம்பரம் என்ற மகிமைக்கு காரணம் சிவகாமசுந்தரி சமேத நடராசப் பெருமானும், அவனுக்கு இடம்பெறும் வழிபாடுகளும், செயற்பாடுகளுமேயாகும். காண வீடு பேறளிப்பது சிதம்பர ஆனந்த நடராசனின் திருவடிவம் திருவைந்தெழுத்தால் ஆனவை என்பர்.

அப்பர் சுவாமிகள் கூறுகின்ற 'குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயில் குமிண் சிரிப்பும்' ஈழத்து சிதம்பர ஆடவல் வானில் அமையக் காண்கிறோம். இத்தகைய ஆடவல்லானுக்கு ஆனி உத்தரமும், மார்கழித் திருவாதிரையும் மகத்துவமான நாட்கள். ஆனி உத்தரமே பின்னர் பங்குனி உத்தரமாக மாற்றப்பட்டதெனப் பெரியார் கூறுவர். வருடத்தில் மார்கழி, பங்குனி, ஆடி என மூன்று முறை தேரோட்டம் இடம்பெறும். மார்கழியிலும், பங்குனியிலும் ஐயனார் தனித் தேரில் பவனிவருவது சிறப்பாகும்.

இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட ஈழத்து சிதம்பரத்தில் இன்று பஞ்சரத பவனி கண்கொள்ளாக் காட்சியாக நடைபெறுகின்றது.

மார்கழித் திருவாதிரையே எம்பெருமானுக்கு மகத்துவமான தெய்வீகத் திருநாள். ஈழத்து சிதம்பர ஆடவல்லான் சௌந்தராம்பிகை சகிதம் புதிய சித்திரத் தேரிலே பவனி வருகின்ற காட்சியை காண லட்சோப லட்சம் மக்கள் காரையெம்பதியிலே கூடுவர். ஐந்து தேர்களும் இன்று தில்லை வீதியிலே ஓடுகின்ற திருக்காட்சி சிதம்பர தரிசனத்தை ஒத்திருக்கும். வாருங்கள் வந்து வடம் பிடித்து ஈழத்து சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமானின் நல்லருளை பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக

காரை எம்.பி.அருளானந்தன்

# படையினரின் அத்துமீறிய செயல்களைக் கண்டித்து நோர்வேயில் மாணவர்கள் கவன ஈர்ப்புப் போராட்டம்



ஒஸ்லோ—

தமிழ் கல்விச் சமூகத்தின் மீதான இலங்கை அரச படைகளின் படுகொலைகளையும், தாக்குதல்களையும், தமிழ்ப் பெண்கள் மீதான படையினரின் பாலியல் படுகொலைகளையும் வன்மையாகக் கண்டிக்கும் வகையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கவன ஈர்ப்பு ஒன்றுகூடல் நடைபெற்றது.

நோர்வே தமிழ் இளையோர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கவன ஈர்ப்பு ஒன்றுகூடல் பிற்பகல்2 மணிக்கு நோர்வே வெளியுறவு அமைச்சகத்தின் முன்பாக நடைபெற்றது.

பாடசாலை நேரத்தில் இந்த ஒன்று கூடல் நடைபெற்றபோதும் 300 இற்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றனர்.

இலங்கை அரச படைகளின் அத்துமீறல்களையும், மாணவர்கள் மீதான படுகொலைகள், தாக்குதல்களைக் கண்டிக்கும் பதாகைகளையும் கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கி நின்றனர்.

தமிழ் மாணவர்கள் மீதான படுகொலைகளை நோர்வே உட்பட அனைத்துலக நாடுகள் கண்டிக்க வேண்டும்.

தமிழ் மாணவர்கள் மீதான படு கொலைகள், தாக்குதல்களை இலங்கைப் படைகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

தமிழ்ப் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலை உணர்வாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான படுகொலைகள் கண்டிக்கப்படவேண்டும்.

செயலிழந்து போயிருக்கும் சமாதான முயற்சிகள் மீண்டும் தொடங்கப்படவேண்டும். ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் தாங்கி நின்றனர்.

ஒன்றுகூடலின்போது நோர்வே வெளியுறவு அமைச்சகத்தின் பிரதிநிதியான லீசா கோல்டன் உரையாற்றினார்.

நோர்வே வாழ் தமிழ் மாணவர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுப்பது வரவேற்பிற்குரியது என்று அவர் தனதுரையில் தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழ் இளையோர் அமைப்பின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினருக்கும், லீசா கோல்டனுக்குமிடையேயான சந்திப்பு வெளிநாட்டமைச்சகத்தில் நடைபெற்றது.

இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களில் தமிழ் மக்கள், தமிழ் மாணவர்கள் மீதான படைகளின் மிலேச்சத்தனங்களும், மிருகத்தனங்களும், மனித உரிமை மீறல்களும் உச்ச நிலைக்குச் சென்றுள்ளன என்பதை லீசா கோல்டனிடம் இளையோர் அமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும் தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக விரிவாக எடுத்து விளக்கி, அத்துமீறல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று வலியுறுத்திக் கூறிய இளையோர் அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் லீசா கோல்டன் ஊடாக நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன்ஸ் ஸ்தோற் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் ஆகியோருக்கு வழங்கினர்.

## காணாமற்போன இளவாலை இளைஞர் குறித்து நிசோரிலும் உறவினர்களால் முறைப்பாடு

கிளிநொச்சி—

யாழ்ப்பாணம் - இளவாலையில் ராஜீவ்மோகன் என்ற இளைஞரை இராணுவத்தினருடன் வந்த ஒருவர் அழைத்துச்சென்றதன் பின்னர் காணவில்லை என்று வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செயலகமான நிசோரில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிசோர் செயலாளர் என்.மாலதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அதிகாலை 1மணியளவில் 6அல்லது 7பேர் கறுப்பு முகமூடி அணிந்து கொண்டு ராஜீவ் மோகனின் வீட்டிற்குச்சென்றபோது - அவர் மற்றும் வீட்டிலுள்ளோர் உறங்கிக் கொண்டிருந்தனர்.

முகமூடி அணிந்த குழுவினர் ஜன்னல் கதவுகளைத்தட்டி கதவைத் திறக்குமாறு அச்சுறுத்தியுள்ளனர். இதனால் விளக்குகள் எரியவிடப்பட்டு கதவு திறக்கப்பட்டுள்ளது. ராஜீவ் மோகனை அந்தக் குழுவைச் சேர்ந்த இருவர் இழுத்துச் சென்றனர்.

ராஜீவ் மோகனின் தாயார் சத்தம் எழுப்ப முயற்சித்தபோது துப்பாக்கி முனையில் அவரது தொண்டையில் அந்த நபர் தாக்கியுள்ளார். கறுப்பு முகமூடி அணிந்து வந்தவர்கள் நன்றாகத் தமிழில் பேசியுள்ளனர். அந்த வீட்டின் இரண்டு வெளிக் கதவுகள் பூட்டப்பட்டிருந்த நிலையில் அதைத் திறக்கக் கூறியுள்ளனர். இவர்கள் சுவர் ஏறிக்குதித்து வந்தது இதன் மூலம் தெரியவந்துள்ளது.

வீட்டின் வெளிக்கதவுக்கான திறப்பை எடுத்துத்தரும்படி ராஜீவ்மோகனை அந்த கறுப்பு முகமூடிக்குழுவினர் மிரட்டியுள்ளனர். அவர் தாமதித்துக் கொண்டிருக்கும்போது அவர் முகத்தில் தாக்கியுள்ளனர்.

அந்த நபர் ராஜீவ்மோகனுடன் வெளியே சென்ற போது 25-க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கூச்சல் எழுப்பிக்கொண்டு ராஜீவ்மோகனை கடத்திச்சென்றுள்ளனர்.

ஒரு வெள்ளை வான் மற்றும்இரு இராணுவ வாகனங்களில் இராணுவத்தினரும் கறுப்பு முகமூடி அணிந்தோரும் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திலிருந்து இளவாலை பொலிஸ் நிலையம் 100மீற்றர் தொலைவில்தான் உள்ளது. ராஜீவ்மோகன் குடும்பத்தினர் உடனே பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

அதன் பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர். நிசோரில் தற்போது முறையிட்டுமுள்ளனர்.

கடத்திச்செல்லப்பட்ட ராஜீவ் மோகன் புனிதஹென்றியரசர் கல்லூரியில் படித்தவர். கட்டார் டோகாவில் 20மாதங்கள் பணிபுரிந்துள்ளார். டோகாவில் போதிய வருமானமின்றி 4மாதங்களுக்கு முன்பு தான் அவர் இலங்கை திரும்பியுள்ளார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது



எலக்ட்ரோனிக் பொருட்களின் ஜாம்பவான்களான ஜப்பானின் தொஷிபா நிறுவனம் குஸ்மியோ ஜி 30 என்ற நோட்புக் கணினியை அடுத்த மாதம் சந்தையில் அறிமுகப்படுத்தவுள்ளது. இந்தக் கணினி திரையுலகிலேயே அதிநவீன மிகத் துல்லியமான படத்தை வழங்கக் கூடியது என்பதுதான் இதன் சிறப்பம்சமாகும்.

# ஹரிபொட்டரின் பெற்றோர் இறப்பதாக எழுதியது ஏன்?

## நூலாசிரியர் விளக்கம்

லண்டன்—

ஹரிபொட்டர் நாவலில் - ஹரிபொட்டரின் பெற்றோர் மரணமடைந்ததாக எழுதியது ஏன்? என்றுஅந்த நாவலை எழுதிய ஜே.கே.ரவுலிங் விளக்கமளித்துள்ளார்

ஜேம்ஸ்பொண்ட் கற்பனை கதாபாத்திரத்தை வைத்து ஏராளமான திரைப்படங்களும், புத்தகங்களும் வெளிவந்துள்ளன. அதுபோல், ஹரிபொட்டர் என்ற கற்பனைச்சிறுவன் கதாபாத்திரத்தை வைத்து, ஜே.கே.ரவுலிங் என்ற பெண், இதுவரை 6நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இந்தக்கதாபாத்திரத்தை வைத்து 4திரைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன .

இந்தச் சிறுவன், மயாஜால வித்தைகள் தெரிந்தவனாக சித்தரிக்கப்படுகிறான். அந்த வித்தைகளைப் பயன்படுத்தி அவன் செய்யும் சாகசங்கள், சிறுவர்களை மிகவும் கவர்ந்துள்ளன. இந்த நாவல்களின் 30கோடிக்கும் மேற்பட்ட பிரதிகள் உலகம் முழுவதும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த நாவல்களை எழுதிய ஜே.கே.ரவுலிங் கோடீஸ்வரி ஆகிவிட்டார். அவருக்கு 40 வயது ஆகிறது .

ஜே.கே.ரவுலிங்,2தடவை திருமணம் செய்து கொண்டவர், முதல் கணவர் மூலமாக அவருக்கு ஒரு குழந்தை உள்ளது. இரண்டாவதாக, நீல் மூரே என்ற டொக்டரை 2001-ம் ஆண்டு அவர் திருமணம் செய்து கொண்டார். அவர் மூலமாக 3 குழந்தைகள் உள்ளனர்.

தற்போது ஹரிபொட்டர் கதையின் 7-வது நாவலை ஜே.கே.ரவுலிங் எழுதி வருகிறார். இதுதான் கடைசி ஹரிபொட்டர் நாவல் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு இறுதியில் இது வெளியாகும்.

ஜே.கே.ரவுலிங், பத்திரிகைகளுக்கு பேட்டி அளிக்காமல் நழுவியே வந்தார். இந்நிலையில் மிகவும் அதிசயமாக அவர் பேட்டியளித்துள்ளார். அதில் ஹரிபொட்டரின் பெற்றோர் மரணம் அடைவது போல எழுதியது ஏன்? என்று விளக்கியுள்ளார்.

அவர் கூறியதாவது-

1991ஆம் ஆண்டு நான் ஹரிபொட்டர் நாவலை எழுதிக்கொண்டு இருந்தேன். ஒரு நாள் மிகவும் சீக்கிரமாகப் படுக்கைக்குச் சென்றேன். ஆனால் படுத்து உறங்காமல், ஹரிபொட்டர் நாவலை எழுதத்தொடங்கி விட்டேன். அப்போதுதான், எனது தாயார் மரணம் அடைந்தார். அவர் பத்து ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு, கடைசியாக மறைந்தார். ஹரிபொட்டர் நூலைப்பற்றி ஒரு முறை கூட நான் அவரிடம் சொன்னதில்லை. அந்த நாவல் அமோகமாக விற்பனை ஆனதைப் பார்க்காமலேயே என் தாயார் மறைந்துவிட்டார் என்பது தான் ஒரே வருத்தம்.

என் தாயாரின் மரணம் என்னை அதிகமாகப் பாதித்தது. அதிலிருந்து என் நாவல்களில் வரும் கதாபாத்திரங்களையும் மரணம் அடைவது போல எழுதத் தொடங்கினேன். இப்படித்தான் ஹரிபொட்டரின் பெற்றோர் மரணம் அடைவதாக எழுதினேன். மரணம் என்ற வார்த்தை, என்னை மிகவும் பாதித்தது.

எனது முதல் திருமண வாழ்க்கையின் போது, நான் பாறைக்கு நடுவே சிக்கிக்கொண்டது போலத் தவித்தேன். எப்படி சமாளிப்பது என்றே தெரியவில்லை. இரண்டாவது திருமணம் தான், என்னை மீட்டு என் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்தது எனத்தெரிவித்தார்.

## அமெரிக்க இராணுவத்தின் ஈராக்கிற்கான செலவு 90 லட்சம் கோடி ரூபா

பாஸ்டன்—

ஈராக் மீது போர் தொடுத்ததற்காக அமெரிக்கா 90 லட்சம் கோடி ரூபாய் செலவு செய்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்தப் போரில் 16 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் காயமடைந்தனர். அவர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகையையும் சேர்த்துத்தான் 90 லட்சம் கோடி ரூபாய் செலவானதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவம் 2010 ஆம் ஆண்டு வரை ஈராக்கில் தங்கியிருந்தால் அதுவரை ஆகும் செலவையும் சேர்த்துத்தான் 90 லட்சம் கோடி ரூபாய் செலவாகும் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக அமெரிக்க இராணுவம் வெளியேறுமானால் செலவுத் தொகை குறையும்.

## உலக நோக்கு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# பொதுமக்களைப் பாதிக்காமல் சுற்றிவளைப்பு நடைபெறுமாம்!

## மட்டக்களப்பு இணைப்பதிகாரி கூறுகிறார்

மட்டக்களப்பு—

சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல்களில் ஈடுபடும் படையினர் பொதுமக்களின் நாளாந்த செயற்பாடுகள் பாதிக்கப்படும் வகையில் நடந்துகொள்ளமாட்டார்களென- மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி மேஜர் பெரேரா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் படையினர் மேற்கொள்ளும் சுற்றிவளைப்பினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பது தொடர்பான விசேட கூட்டமொன்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக பதில் பொறுப்பதிகாரி, மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி மேஜர் பேட்டி பெரேரா மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

படையினரின் தேடுதல்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து இந்தக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் தேடுதல்கள் மேற்கொள்ளப்படுமென படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டதுடன், படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவை வளர்ப்பதெனவும், இந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் இன்றுமுதல் 3 நாட்களுக்கு ஹர்த்தால்

## அழைப்பு விடுக்கிறது ஜே.வி.பி.

திருகோணமலை—

திருகோணமலையில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் படுகொலை குறித்து விசாரணை நடத்துவதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், டோறா படகு மீதான தாக்குதல்களைக் கண்டித்தும் இன்றுமுதல் மூன்று நாட்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஜே.வி.பியின் ஆதரவு அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

திருகோணமலை மக்களை ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறுகோரும் சிங்கள மொழியிலான துண்டுப்பிரசுரம் நேற்று விநியோகிக்கப்பட்டது.

அந்தத் துண்டுப்பிரசுரத்தில் -

சிங்கள மக்கள் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டு வருகின்றபோதிலும் அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

விடுதலைப் புலிகள் - மாணவர்கள் போன்று மறைந்திருந்து தாக்குதல் நடத்தத் தயாரானவேளை படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்த அரசு குழு அமைத்துவருவது கண்டனத்துக்குரியது.

அத்துடன் - விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அதிவேக டோறா படகொன்று அழிக்கப்பட்டுள்ளது. இது போர்நிறுத்தத்தை மீறும் செயலாகும்.

இவ்வாறான சம்பவத்தைக் கண்டித்தும், அரசாங்கம் விசாரணைக் குழு அமைத்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மூன்று நாட்களுக்கு வர்த்தக நிலையங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தையும் மூடி, போக்குவரத்துச் சேவைகளை இடைநிறுத்தி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-10)

# 5 வருட ஆயுதக் கொள்வனவு; விசாரணை நடத்தப் பணிப்பு!

கொழும்பு—

கடந்த ஐந்து வருடகாலத்தில் முப்படைகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக்கொள்வனவு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு மூவர் அடங்கிய குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

தற்போது சேவையிலிருந்து ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மூவரை இந்த விசாரணைக்குழுவில் நியமிக்குமாறு தமது செயலாளர் லலித் விரதுங்கவுக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஐந்துவருட காலத்திற்குள் படையினருக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தவேளை ஊழல் மோசடிகள், இடம்பெற்றிருப்பின் அவற்றைக் கண்டறிந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பு மேற்படி ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

படையினருக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்தவேளை, ஊழல்மோசடிகள் இடம்பெற்றதாகப் பல்வேறு தரப்பிலிருந்தும் தெரிவிக்கப்பட்டதையடுத்து இந்தக் குழுவை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஆயுதக் கொள்வனவு தொடர்பாக படை உயரதிகாரிகள் சிலர் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# மேஜர் சோதியா நினைவு நிகழ்வு!

கிளிநொச்சி—

மேஜர் சோதியாவின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று புதன்கிழமை கிளிநொச்சியிலுள்ள பிரத்தியேகத் தளம் ஒன்றில் லெப். கேணல் ராஜன் கல்விப்பிரிவுப் போராளி மகிழினி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணித் தளபதிகளில் ஒருவரான அமுதாப் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியினை மாலதி படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான இளங்கிளை ஏற்றினார்.

மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை வட போர்முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான ரமேஸ் ஏற்ற, மலர் மாலையினை சோதியா படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான அரசலா அணிவித்தார்.

சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலன் சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து போராளிகளின் கவிதைகள் இடம்பெற்றன.

# கைக்குண்டுத் தாக்குதல்!

சாவகச்சேரி—

வரணி மகாவித்தியாலயத்துக்குச் சமீபமாக அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## வாள்...

படுகாயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ மருத்துவமனையில் மிகவும் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வன்முறைகளை...

தரப்பினரும் செயற்பட வேண்டும். இது நிரந்தரத் தீர்வு ஏற்படுத்துவதற்கான படிக்கல்லாக அமையும்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் அமுலாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் வன்முறைகளால் மீறப்பட்டுள்ளது. அத்துடன் வட, கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் கவலையளிப்பதாக உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுப்பிட்டி...

யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்படி அச்சுவேலி பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதையடுத்து அச்சுவேலிப் பொலிஸாரால் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு வைத்திய பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## படையினரின்...

தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டதையடுத்து சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸாரால் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை - கிரனேட் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்து பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்பில்...

நிர்வாகத்தையும், கேந்திர நிலையமான கொழும்பு நகரையும் பாதுகாப்பாக வைத்திருக்கவும், சட்டத்தையும், சமாதானத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கும், சோதனைகளை மேற்கொண்டு பயங்கரவாதிகளை சட்டத்தின்முன் கொண்டுவருவது அத்தியாவசியமானது.

இந்தச் சோதனை நடவடிக்கைகள் தமிழர்களைத் துன்புறுத்துவதற்கு அல்ல. எனவே, இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களிடம் கொழும்பு நகரில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் உயிர்களும், சொத்துக்களும் அழிக்கப்பட்டு, மனிதப் படுகொலைகள் நிகழ்த்தப்படுமானால் அதற்கு அவர்கள் பொறுப்பேற்பார்களா? என நாம் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## சமூர்த்தி...

பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பாகத் தெரியப்படுத்தப்பட்ட பின்னர் உறவினர்களால்சடலம்யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. சடலம் வைத்திய பரிசோதனையின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## கடற்படைக்கு...

தயாசந்தகிரி ஒப்பந்தம் செய்திருந்தார்.

புதிய பீரங்கிகள் என்ற பெயரில் பிரிட்டிஷ் கடற்படையால் கழிக்கப்பட்ட 30 மில்லிமீற்றர் பீரங்கிகளே இலங்கைக் கடற்படைக்கு விநியோகிக்கப்படவிருந்த நிலையில் - கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்திருந்தார்.

இதனால் சீனாவிடமிருந்து அவசரமாக 30 மில்லிமீற்றர் பீரங்கிகளைப் பெற்று அதிவேகத் தாக்குதல் படகுகளில் பொருத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயர்மட்டக் கடற்படை அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இந்த வார இறுதியில் சீனாவுக்குச் சென்று இந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இந்தத் தகவலை பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தாத போதும் - சீனாவே இலங்கையின் பிரதான ஆயுத விற்பனை நாடாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

# எட்டுத் தமிழ் இளைஞர்கள் புத்தளத்தில் வைத்து கைது!

புத்தளம்—

புத்தளத்தில் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் 8 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கண்டி - புத்தளம் வீதியில் கற்பிட்டிக்கும் பாலாவிக்கும் இடையே மாம்புரி என்ற இடத்திலுள்ள இராணுவச் சோதனைச்சாவடியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் மாலை கற்பிட்டிப் பகுதிக்கு அடையாளம் தெரியாத 11 நபர்கள் வந்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து கடற்படையினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து இவர்கள் 11 பேரும் பஸ் ஒன்றில் ஏறித் தப்பிச்செல்ல முயன்ற வேளை - மாம்புரி சோதனைச் சாவடியில் உள்ள படையினரை கடற்படையினர் உஷார்படுத்தினர்.

இதனையடுத்து சோதனைச்சாவடியில் வைத்து 11 பேரும் கைதாகினர். இவர்கள் தம்மை அடையாளம் காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்ததையடுத்து விடுவிக்கப்பட்டனர்.

எஞ்சிய எட்டுப்பேரும் கடற்படையினரால் கைதாகி கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். 20-40 வயதுக்கு இடைப்பட்ட இவர்கள் அனைவரும் மூதூர்-கட்டைப் பறிச்சான் பகுதியைச்சேர்ந்தவர்களாவர். இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டோர் -

குணம் குமரன், வடிவேல் நாகராசா, எஸ்.யுவராசா, இராமையா காளிராஜா, காந்தன் நாதன், செல்லப்பா சிவஞானம், ஏறாமுத்து பாலராஜா, ஏறாமுத்து துரைசிங்கம் ஆகிய எட்டுப் பேரும் ஏன் சிற்றூர்தியில் சென்றனர் என்பது தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக கற்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்ஷ்மன் பெரேரா தெரிவித்தார்.

# நாடாளுமன்றில் விசேட விவாதம்!

கொழும்பு—

இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாகவும், எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தனவின் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இதுகுறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் மகிந்த சமரசிங்க இந்தக்கூட்டத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கொல்லப்பட்டதுடன், வேறு சிலருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்புத் தொடர்பாக நடைமுறை செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும் எனவும் படை அதிகாரிகளை அழைத்து இது குறித்து நடவடிக்கை எடுத்த பின்னர் சபாநாயகருக்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். (தே)

# மேலும் ஒரு ஓடுபாதை கட்டுநாயக்கவில் அமைப்பு!

கொழும்பு—

கட்டுநாயக்க- பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையத்தில் தற்போதுள்ள ஓடுபாதைக்குச் சமாந்தரமாக மற்றுமொரு ஓடுபாதையை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த விடயத்தை ஆராய்ந்து சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு சிபார்சுகளை மேற்கொள்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு புவிசரிதவியல் சார்ந்த காரணிகள் பற்றி அதிக கவனம் செலுத்தி வருவதாக அதிகார சபையின்பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

புதிய ஓடுபாதை அமைப்பதற்காக 5 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றன. ஓடுபாதைகளை அதிகரிப்பதால் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகையை அதிகரிப்பதுடன், சுற்றுலாத்துறை சார்ந்த அபிவிருத்தி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திரு. மார்க்கண்டு கேதீஸ்வரராஜா
### (சந்திரன்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட மார்க்கண்டு சேதுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வன் கேதீஸ்வரராஜா (சந்திரன்) 10.01.06 அன்று காலமானார்.

இவர் வவாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி (செட்டிகுளம்), பரமேஸ்வரி (வட்டக்கச்சி), தர்மலிங்கம் (ஜேர்மனி), அமிர்தலிங்கம் (வவுனியா), மகான் (லண்டன்), யோகன் (லண்டன்), நந்தினி (கிளி.வைத்தியசாலை), குமுதா, சுதா (மூன்றுமுறிப்பு), வவா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12.01.06 வியாழக்கிழமை மாலை நெடுந்தீவு மேற்கில் நடைபெறும்.

2 ஆம் வட்டாரம்,
நெடு.மேற்கு,
நெடுந்தீவு.

(2163)

தகவல்:
மா.அமிர்தலிங்கம்
(சகோதரன்)

A/L 2008
ஸ்ரார் கல்வி நிலையம்
கலை வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:- 15.01.2006 ஞாயிறு

வர்த்தகம்:- 9.00மணி
Acc:- சீலன்
Bu.st:- உமாகாந்
Tamil:- பாலா
Drama:- சுதன்
GEO: I.S.ஜெகன்

கலை:- 4.00மணி
Eco:- மோகன்
Log:- R.P. சர்மா
H.cu:- சந்திரன்
CHR:- கொலின்ஸ்
P.Sc:- தீபன்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.